
**Laodicean Times**

**லவோதிக்கேயன் டைம்ஸ்**

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு 10 தொகுதி 3 ஜூலை - செப்டம்பர் 2020




**R 5436**

# "அநீதியான உக்கிராணக்காரன்"

# "THE UNJUST STEWARD'

**"ஆதார வசனங்கள் : லூக்கா 16:1–13**

**"திறவுகோல் வசனம் : லூக்கா 16:10 '"கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்"**

பரிசேயர்கள் நியாயப்பிரமாணத்தில் முக்கிய நிபுணர்களாக இருந்ததால், அவர்களுக்கெதிராக அநேக உவமைகளில் இயேசு சுட்டிக் காண்பித்தார். அதேசமயத்தில், விசுவாசத்தை வெளிப்படையாக காண்பிக்காதிருந்த மத நம்பிக்கையற்ற யூதராயிருந்த சதுசேயரை ஒப்பீட்டளவில் அவர் நிராகரித்தார். இப்பாடம் இதனோடு தொடர்புடையதாக உள்ளது. பரிசேயரின் ஆவிக்கெதிரான கடிந்துகொள்ளுதலாக இந்த உவமை பேசப்பட்டது. இவர்கள் மற்றவர்கள்மீது சுமப்பதற்கரிய பாரங்களை சுமத்தினார்கள், ஆனால் இவர்களோ அதிலிருந்து தப்பித்துக்கொண்டு, நியாயப்பிரமாணத்துக்கு இருதயப்பூர்வமாக கீழ்ப்படியாமல் பாசாங்குசெய்தனர்.

தற்காலத்தைக் காட்டிலும் முற்காலங்களில், ஐஸ்வரியவான்கள் உக்கிராணக்காரர்களை அல்லது காரியதரிசிகளை நியமிப்பது வழக்கமாயிருந்தது. அப்படிப்பட்ட உக்கிராணக்காரன் தன் எஜமானின் உடைமைகள்மீது, எஜமானைப்போலவே முழு கட்டுப்பாட்டை பெற்றிருந்தான், அங்கீகாரம்பெற்ற நபராக இருந்தான்.சில உக்கிராணக்காரர்கள் உண்மையுள்ளோராய் இருந்தனர், மற்றவர்களோ வீணடிப்பவர்களாக விளங்கினர். நம் கர்த்தருடைய உவமையில் குறிப்பிடப்பட்ட நபர், ஊதாரித்தனமாயும், திருப்தியளிக்காதவராயும் இருந்தான். அவனுடைய எஜமான் அவனுடைய ஊழியங்களை முடிவுக்குக் கொண்டுவர தீர்மானித்து, அவனுடைய கணக்குகளை சமர்ப்பிக்கும்படி அவனிடம் கேட்டுக்கொண்டார்.

தங்கள் கடனை அடைக்க வாய்ப்பேயில்லாத, சில குறிப்பிட்ட கடனாளிகளின் பெயர்களும் அவர்களது கணக்குகளும் உக்கிராணக்காரனுடைய நோட்டுப்புத்தகத்தில் இடம் பெற்றிருந்தன. இந்த கடனாளிகளது கடனை குறைப்பதன்மூலம், கடனாளிகள் தங்கள் கடனை திரும்பசெலுத்தி, தன் உக்கிராணப்பணியை முடிவுக்குக் கொண்டுவந்து, தனக்குப் பின் பொறுப்பேற்பவரிடம் ஒப்படைக்க முடியும் என்று உக்கிரமாணக்காரன் தீர்மானித்தான். அவ்வாறே நிறைவேற்றினான். நூறுகுடம் எண்ணெய் கடன்பட்டிருந்தவனை வரவழைத்து, நீ ஐம்பது என்று எழுது என்றான். நூறு கலம் கோதுமை கடன்பட்டிருந்த மற்றவனை நோக்கி, இருபதைக் குறைத்து, நீ அதை எண்பது என்று எழுது என்றான். அவ்வாறே தன்னிடமிருந்த கடனாளிகளது கடனைக் குறைத்து எழுதினான். இவ்விதமாய் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தான் தயவு காண்பித்தோரை தனக்கு நண்பர்களாக்கிக் கொண்டான். இவ்வாறு அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எஜமான் அவனைப் பாராட்டினான்.

பரிசேயர்கள் எதிர்மறையான வழிமுறையை பின்பற்றுவதனால், இயேசு இந்த உவமையை அவர்களுக்குப் பொருத்தி, அவர்களைக் கடிந்துகொண்டார். பரிசேயரும் சதுசேயரும் நியாயப்பிரமாணத்துக்கு வியாக்கியானம் கொடுப்போராக, மோசேயின் ஆசனத்தில் அமர்ந்து, இந்த உக்கிராணக்காரரை பின்பற்றி நடந்து, ஏழை ஆயக்காரர் மற்றும் பாவிகளது மீறுதல்களைக் குறைத்து,

## இம்மாத வெளியீட்டில்

| | பக்கம் |
|---|---|
| ..... அநீதியான உக்கிராணக்காரன் ... | 1 |
| ..... யார் மரணத்துக்கேதுவான பாவத்தை செய்வார்கள்? பாகம் - 1 ... | 4 |
| ..... மகாநாளின் நியாயத்தீர்ப்புக்குரிய இயல்பான தன்மையும் நோக்கமும் ... | 11 |

*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத் தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M-1043– ஹவுசிங் யூனிட், கணபதிமாநகர், கணபதி, கோயமுத்தூர் – 6. செல் : 93441 44000.*

நண்பர்களாக்கிக்கொண்டிருக்கலாம், இவ்வாறு நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளுக்கு இணங்குவோராக, அவர்களால் இயன்றளவு சிறப்பானதைச் செய்ய அவர்களை ஊக்கப்படுத்தியிருக்க முடியும். அதற்கு பதிலாக, அந்த ஜனங்கள்மீது சுமப்பதற்கரிய பாரங்களை சுமத்தி அவர்களை சோர்வுக்குள்ளாக்கினர்.

நியாயப்பிரமாணமானது ஒரு பரிபூரண மனிதனுடைய முழுஆற்றலின் அளவாயிருப்பதால், அதன் கோரிக்கைகளை தாங்கள் நிறைவேற்ற முடியாதிருப்பதை அறிந்திருந்தும், அவர்களால் உதவிசெய்யமுடியாத நிலையை வெளிப்படுத்தாமல், அவர்களது தரப்பில் செய்த இவையனைத்தும் மாய்மாலமானதாக இருந்தது. தங்களுடைய சொந்த குறைபாடுகளை அறிக்கையிடுவதே அவர்களுடைய முறையான மனப்பாங்காக இருந்திருக்கவேண்டும். மேலும் தங்களால் இயன்ற சிறப்பானதைச் செய்ய முயன்று, தேவனிடத்தில் இரக்கத்துக்காக வேண்டுகோள் செய்து, சாமான்ய ஜனங்களும் அதுபோலவே செய்யும்படி போதித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருப்பார்களானால், தங்கள் யுகம் முடிவடையும்போது, சுவிஷேச தயவைப் பெற்றுக்கொள்ள அவர்கள் சிறப்பாக தங்களை ஆயத்தப்படுத்தி இருந்திருப்பார்கள்.ஆனால் அவர்களுடைய போலித்தன்மையால், இயேசுவின் சீஷராகும் நிலையிலிருந்தும், பாவ மன்னிப்பு மற்றும் கிருபையைத் தேடுவதிலும் தங்களை தடைசெய்துகொண்டனர். மேலும் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன்மூலம் தேவ தயவைப் பெறுவது சாத்தியமே என்று உரிமையோடு வாதாடி, மற்றவர்களும் சீஷராவதைத் தடைசெய்தனர்.

**உவமையைப் பொருத்துதல்**

இயேசு பின்பு தம் சீஷரிடத்தில் பேசும்போது, “அநீதியான உலகப்பொருட்களால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்”. உங்களுடைய உக்கிராணத்துவம் மரணத்தில் முடிவடையும்போது, அவை ஒழிந்துவிடும். ஆனாலும் நீங்கள் காண்பித்த பரிவிரக்கத்தின் காரணமாக, உயிர்த்தெழுதலில் நித்திய குடியிருப்புக்குள் ஏற்றுக்கொள்வார்கள். இவ்வாறு நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள் – லூக் 16:9.

இவ்வுவமையின் போதனையைப் பொருத்தவரை, சர்ச்சைக்கு இடமுண்டு, ஆனால் அநீதியுள்ள உக்கிராணக்காரனுடைய ஞானத்தை, அவரது சீஷர்கள், தற்கால வாழ்வில் பெற்றிருக்கிற உலகப்பொருட்களிலும் ஐஸ்வரியங்களிலும் பயிற்சிசெய்யவேண்டும் என்று இயேசு பொருள்படுத்துவதை விளங்கிக்கொள்ள முடிகிறது.

தேவனுடைய பிள்ளைகள் அவரிடத்தில் தங்களை ஒப்புக்கொடுத்த தருணத்திலிருந்து, தங்களுடைய பூமிக்குரிய உரிமைகளையும் நலன்களையும் கொடுத்திருக்கிறார்கள். அது முதற்கொண்டு, தங்களுடைய நேரம், தாலந்து, செல்வாக்கு, சொத்து போன்றவைகளுக்கு உக்கிராணக்காரர்களாக மட்டுமே ஆகின்றனர். “நீங்கள் உங்களுடையவர்களல்ல, விலைகொடுத்து வாங்கப்பட்டீர்கள், ஆகையால் தேவனை மகிமைப்படுத்துங்கள்”. தெய்வீக ஊழியத்தில் நீங்கள் பெற்றிருக்கிற அனைத்தையும் ஆற்றலுடன் பயன்படுத்துங்கள்.

தேவனுடைய இரக்கங்களால் உக்கிராணக்காரரான இவர்கள், பூமிக்குரிய பொருட்கள் எல்லாவற்றையும் ஆவிக்குரிய நலன்களுக்காக பகிர்ந்துகொள்வதன்மூலம், தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறுகின்றனர். தங்கள் பரலோகத்துக்குரிய நலன்களுக்காக பூமிக்குரிய வாய்ப்புக்களை உபயோகிப்பதால், இவர்கள் அநீதியாய் விரயம் செய்தவர்களாக எண்ணப்படமாட்டார்கள். அதற்குமாறாக, ஞானமுள்ள உக்கிராணத்துவமாக இது அவர்களுக்கு கருதப்படும். தேவனுடைய ஊழியத்தில் பூமிக்குரியவைகளை உண்மையாய் உபயோகித்ததாக கண்டடையப்படுவர். இதனால் அவர்களிடத்தில் வருங்காலத்தின் மேலான காரியங்கள் பாதுகாப்பாக ஒப்படைக்கப்படும். இவர்கள் நித்தியமான குடியிருப்புக்களுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேசியாவின் மகிமைநிறைந்த இராஜ்யத்தில் பங்கைப் பெற்றுக்கொள்வர். மனுக்குலத்தின்மீது அருளப்படவிருக்கும் தேவனுடைய எல்லா தயவுகளும் இவர்களிடத்தில் அளிக்கப்படும்.தற்காலத்தில் இவர்களுடைய சுயநலமற்றதன்மையும், பலிசெலுத்த மனதாயிருத்தலும், தெய்வீக அங்கீகாரத்தையும், வரவிருக்கின்ற மகிமையையும் பெறுவதற்கான அடிப்படையாக இருக்கும்.

தற்காலத்தில் அற்பமான மதிப்புள்ள பொருட்களில் உண்மையில்லாதவர்கள்,வருங்காலத்தின் மேலான காரியங்களிலும், ஒப்பிட்டுப்பார்க்கும்போது உண்மையில்லாதோராய் இருப்பர் என்று பொருள்படும். ஆகவே, யாரெல்லாம் தாங்கள் உக்கிராணக்காரராக இருக்கிறவைகள்மீது, சுயநலமாக தங்களுக்கென உரிமைப்படுத்திக் கொள்கிறார்களோ, அவர்கள் வருங்காலத்தின் மேலான காரியங்களிலும் நம்பிக்கைக்குரியவர்களாய் இருக்கமாட்டார்கள். மேலும் யாரெல்லாம் பலிசெலுத்துகிறார்களோ, அவர்கள் தங்கள் உண்மைத்தன்மையையும், தேவனிடத்திலான

நேர்மையையும் வெளிப்படுத்துவதால், இப்படிப்பட்டவர்களுக்கே மேலான காரியங்கள் ஒப்படைக்கப்படும். தற்கால ஆசீர்வாதங்களை சுயதிருப்திக்காக மட்டும் பயன்படுத்தி ,உண்மையில்லாதோராக,சுயநலமுள்ளோராக, பேராசை உடையோராக தங்களை நிரூபிக்கிற எவருக்காவது, தேவன் வருங்கால ஜீவனுக்குரிய மகிமை, கனம், ஐஸ்வரியங்களை ஒப்படைப்பாரா ? நிச்சயமாக ஒப்படைக்கமாட்டார்!

"வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்" என்று இயேசு கேட்கிறார்(லூக் 16:12). இயேசுவின் பின்னடியார்கள் தற்காலத்தில் பெற்றுள்ள அனைத்தும் தேவனுக்குரியது. தற்கால ஜீவியத்தின் பொருட்களும் தேவனுடையது. ஏனெனில் நாம் அவற்றை ஒப்புக்கொடுத்திருக்கிறோம், அல்லது அர்ப்பணித்திருக்கிறோம். வருங்கால ஜீவனுக்குரியவைகளை தேவன் நமக்கு வாக்களித்துள்ளபடியால், அவைகள் நமக்குரியதாகிறது, என்றாலும் அவைகள் நம் உண்மைத்தன்மை, நம் விசுவாசம் ஆகிய நிபந்தனைக்குட்பட்டுள்ளன. நாம் தேவனிடத்தில் அர்ப்பணித்திருக்கிற காரியங்களை கையாள்வதில் உண்மையாயிராவிட்டால், நமக்குரியவைகள் என்று நிபந்தனையோடுகூட அவர் வாக்களித்துள்ளவைகளை அவர் நமக்கு தரமாட்டார். அவ்வாறாக தேவனிடத்தில் அர்ப்பணித்துள்ளவைகளை நம்முடைய சுயநலத்துக்காக பயன்படுத்துவோமானால், நம் உக்கிராணத்துவத்தை தவறாக பயன்படுத்துவோமானால், தேவன் தம்முடைய உண்மையுள்ளவர்களுக்கு மட்டுமே வாக்களித்திருக்கிற காரியங்களை நமக்குத் தருவார் என்று எதிர்பார்க்கமுடியுமா ?

**இரு எஜமான்களுக்கு ஊழியம்செய்தல்**

தீமை மற்றும் நன்மை என்கிற இரண்டு மாபெரும் உந்து சக்திகள் உள்ளன. இவைகள் வேறுபட்ட பெயர்களால் அறியப்பட்டு, எவ்வகையிலும் எதிரெதிராக உள்ளன. தேவன் நல்ல எஜமானராயிருக்கிறார். சாத்தான் தீய எஜமானனாயிருக்கிறான். இரண்டுபேரும் தனித்தனியே பிரதிநிதிகளையும், வெவ்வேறான ஆர்வங்களையும் உடையவர்களாயுள்ளனர். இவ்வாறு தேவன் தம் ஆவியினாலும் தம் போதனைகளாலும், அன்பு என்ற வார்த்தையை பிரதிபலிக்கிறார். ஆனால் சாத்தானும் அவனுடைய நடைமுறையும், சுயநலத்துக்கும் பேராசைக்கும் உலகப்பொருளுக்கும் பிரதிநிதியாக காட்டப்படுகிறது. மனிதனுடைய வீழ்ச்சியினிமித்தமாக முழு உலகமும் தேவஆவியை இழந்திருக்கிறது. மேலும் சாத்தானின் ஆதிக்கத்தின்கீழ், பல நூற்றாண்டுகளாக இருந்துவருகிறது. அனைத்தும் ஏறக்குறைய தீமையானதாகிவிட்டது. சுயநலம் மற்றும் பெருமையின்ஆவி பொதுவாகவே அநீதிக்குள் நடத்திச்சென்று, நம் மனுக்குலத்தின்மீதும் தன் பிடியை இறுக்கியிருக்கிறது. இதனால் அதன் தவறான நடைமுறையை நாம்அறிந்தபோதிலும், நம்மீதான அதன் வல்லமையை தடைசெய்வதில் பெரும் சிரமம் ஏற்படுகிறது. "நாம் செய்யவிரும்புபவைகளை நம்மால் செய்யமுடியாதிருக்கிறது".

ஆனால் இங்கு, சுவிசேஷத்தின் பரிமாணம் வருகிறது. சில உண்மையுள்ள ஆத்துமாக்கள், இயேசுவோடு இணைந்து, அவரது ஆசீர்வாதங்களை பகிர்ந்தளிக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். யார் முறையான ஆவியைப் பெற்றுள்ளதை வெளிப்படுத்துகிறார்களோ, அவர்களுக்கு அவர் இராஜ்யத்தின் மாபெரும் பரிசை அளிக்கிறார். இந்தப் பரிசு மிகவும் விலையேறப்பெற்ற முத்து. இதோடுகூட ஒப்பிடுமளவுக்கு வேறு எந்தக் கருத்தும் இல்லை. யார் சுவிசேஷ அழைப்பை அறிவுக்கூர்மையோடு ஏற்றுக்கொள்கிறார்களோ, அவர்கள் பாவம், சுயநலம் மற்றும் மாம்சத்தின் எல்லாக் கிரியைகளுக்கும் தங்கள்முதுகைக் காட்டுவதோடு, சாத்தானோடு சம்பந்தப்பட்டவைகளிலிருந்தும் விலகி, அன்பு, நீதியை நோக்கி , தேவனை நோக்கி தங்கள் முகத்தைத் திருப்புகிறார்கள்.

ஆனால் அவர் , உலகத்தை விட்டுவிடவும், இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதுமான உடன்படிக்கைக்குள் நுழைந்தால் மாத்திரம் போதாது, அந்த உடன்படிக்கையை தேவன் ஏற்று, தம் பரிசுத்தஆவியால் நம்மை ஜெனிப்பிக்குதலும் போதாது, அதற்கும் மேலாக ஒன்று தேவைப்படுகிறது. அவர் அநீதிக்கு பதிலாக நியாயமானதை விரும்பி தேர்ந்தெடுப்பதை அவர் நிரூபிப்பதோடு, நியாயத்தின் பக்கமாக, தேவனின் பக்கமாக நிற்கும்பொருட்டு, எல்லாவற்றையும் இழக்க மனதாயிருக்கவேண்டும்.

அதன்பிறகுபரீட்சையும், சோதனையும் வருகிறது. தேவனுக்கு ஊழியம் செய்யவும், அதன் வெகுமதியாக, இராஜ்யத்தில் இயேசுவோடுகூட மகிமை, கனம், சாவாமையை அடையவும் அவர் தேடுகிறார், ஆனாலும் சுயநலத்தால் இவ்வுலகப் பொருட்களின் வெகுமதியை மதித்து, அதைத்தேடும் மனப்பான்மையை தன் மாம்சத்தில் பெற்றிருப்பதை காண்கிறார். இது மாபெரும் யுத்தத்தைக் கொண்டுவருகிறது. இந்த இரண்டில் ஏதாவது ஒன்று

வெற்றி பெற்றாகவேண்டும். கிறிஸ்துவுக்குள்ளான புதுசிருஷ்டியானது கிருபையிலும் அறிவிலும் அன்பிலும் வளர்வதோடுகூட, தெய்வீக உற்சாகமூட்டுதல்களாலும், வேதாகமத்தின் வாக்குத்தத்தங்களாலும் போஷிப்பிக்கப்பட வேண்டும். இல்லாவிடில் அவர் சோர்வடைந்து, உலகம் மாம்சம் சாத்தானுக்கு எதிராக போரிடுவதை முற்றிலும் விட்டுவிடுவார்.

உண்மையுள்ளவர்களுக்கு, ஏற்ற சமயத்தில் தேவையான, போதுமான கிருபையை அளிப்பதாக கர்த்தர் வாக்களித்திருக்கிறார். நாம் மண் என்று அவர் அறிந்திருப்பதாக நம்மிடத்தில் கூறுகிறார். நாம் செய்ய விரும்பினவைகளை நம்மால் செய்யமுடியாத நம் உருவத்தை, அவர் நினைவுகூர்கிறார். ஆனால் அதே சமயத்தில், நம்மால் செய்யமுடிந்தஅளவுக்கு அனைத்தையும் செய்யும்படி அவர் கேட்கிறார். மேலும் தம் கிருபை போதுமானது என்று அவர்கள் எல்லோருக்கும் உறுதியளிக்கிறார். அதாவது, அப்படிப்பட்ட அனைவருடைய குறைபாட்டையும் அவர் ஈடுகட்டுகிறார்.

தெரிந்தெடுக்கும் நமது விருப்பம் நிரந்தரமான ஒன்றாக இருக்கவேண்டும் என்று நம் பாடத்தில், நம்மை இயேசு முன்னெச்சரிக்கிறார். ஏனெனில் ஒரே சமயத்தில் தேவனுக்கும் இவ்வுலகப் பொருட்களுக்கும் ஊழியம் செய்ய எண்ணுவது தவறு. அதற்கேற்ப, நாம் ஒருவருக்கு உண்மையாயிருந்து, மற்றவருக்கு துரோகம் செய்வோம். ஆகவே தேவனுக்கு ஊழியம்செய்வதை தெரிவுசெய்வோமானால், அதை நம் மாபெரும் சிலாக்கியமாகவும், அதன் வெகுமதிகள் மற்ற எல்லா வெகுமதிகளைக் காட்டிலும் மிகப்பெரியதும், நித்தியத்துவம் வாய்ந்ததுமாகும் என்று எண்ணுவோமாக.

மொத்தத்தில் பார்க்கும்போது, நம் விசுவாசத்தின் அளவைச் சார்ந்தே, அனைத்தும் உள்ளது. நாம் தேவனிடத்தில் , அவருடைய மாபெரும் வெகுமதியாகிய வாக்குத்தத்தத்தில் விசுவாசம் வைத்திருப்போமானால், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் அவரது கிருபையையும், உதவியையும் தருவதாக வாக்களித்திருக்கிற நம் இரட்சகர்மேல் விசுவாசம் வைப்போமானால், அவரை எல்லாவற்றிற்கும் மேலாக நேசிப்பவர்களுக்கென்று கர்த்தர் ஆயத்தம் பண்ணியிருக்கிறவைகளுக்காக நல்ல போராட்டம் போராடி, கிரீடத்தை அடைவது நமக்கு சாத்தியமானதேயாகும்.

--------

**R 5438**

# "யார் மரணத்துக்கேதுவான பாவத்தைசெய்வார்கள்?"-பாகம்1

## "WHO COMMITS THE SIN UNTO DEATH?" - Part 1

**திறவுகோல் வசனம் : 1யோவான் 3:9**

**"தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ் செய்யமாட்டான்"**

### புதுசிருஷ்டியின் சிலாக்கியங்களும் பொறுப்புக்களும் மற்றும் ஆபத்துக்களும்

(Privileges, responsibilities and dangers of the New creature)

திருச்சபையானது மனித சுபாவத்திலிருந்து ஆவிக்குரிய சுபாவத்திற்கு மாறுதலடைவது தொடர்பான கேள்விகளில் ஒரு குறிப்பிடத்தக்கஅளவு சிக்கல் இணைந்திருக்கிறது. அந்த மாறுதலின் ஆரம்ப செயல்முறையாகிய "ஆவியில் ஜெனிப்பிக்கப்படுதலை" நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டுமெனில், மாறுதல் அடைந்த அந்த மனித சித்தமானது எதனால் அமைக்கப்பட்டுள்ளது என முறையாக அறிந்துகொள்ளவேண்டும்.

மகா சபை(Congress) அல்லது பாராளுமன்றம் போன்ற ஒரு சட்டமன்ற அமைப்பைக் காட்டிலும், இப்பாடத்தை விளக்க வேறு எந்த சிறப்பான உதாரணத்தை நினைக்கமுடியாது. இக்கூட்டங்களில் ஏராளமான உறுப்பினர்கள் அமர்வில் அமர்ந்திருப்பார்கள். ஆனால் அவைகள் கட்சிகள் எனப்படும் குழுக்களாகப் பிரிந்திருந்து அமர்ந்து கொள்வர். சில உறுப்பினர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்களாயும், மற்றவர்கள் மற்றவொரு கட்சியினை சேர்ந்தவர்களாயுமிருப்பர். ஆனால் செல்வாக்குப் பெற்றிருக்கும் ஆளும் கட்சியோ கட்டுப்பாட்டை செய்கிறது.

அதுபோலவே மனித மூளையில் உள்ளது. அங்கு நமக்கு ஏராளமான பிரிவுகள் உள்ளன. அவை பல்வேறு மதரீதியான உணர்வுகள், நுண்ணறிவுத்திறன், ஒழுக்கநெறி, பாச உணர்வுகள் போன்றவற்றை பிரதிநிதித்துவப்–படுத்துகின்றன. பின்பு சில பகுதிகள் ஆற்றலையும், ஏதொன்றையாவது அடையும் எண்ணத்தையும், சில சண்டையிடும் போக்கையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இந்த வித்தியாசமான உணர்வுகள், சேர்ந்து, ஏதோவொரு கேள்வியை பரிசீலிக்கும்போது, இவையனைத்தும் தனித்தனி

பிரிவுகளாக இருந்து, வலிமையான எண்ணம் மற்றவைகளைக் காட்டிலும் மேலோங்கி இருக்கும். உதாரணமாக சுயநலன்களை உள்ளடக்கிய எந்த ஒரு காரியமும் பரிசீலனைக்கு வரும்போது, யாதொன்றை அடையும் ஆர்வம் மிகவும் வலுவானதாயிருந்து, பின் இந்த எண்ணமானது, விரும்பிய காரியத்தை அடைய, போராட்ட குணத்திற்கு வழிநடத்தி சண்டையிடச் செய்யும். சண்டையிடத் தூண்டி, அழிவுக்கும் இது வழிவகுக்கும். அது ஓரளவுக்கு நீதியின் குரலை அல்லது மனசாட்சியை மூழ்கடித்து அன்பின் தரத்தை தடுத்துவிடும். யாதொன்றையாவது அடையும் ஆசையானது, அன்பினால் செய்யப்படும் செயல்பாடுகளை தடைசெய்யும் திட்டங்களாகக்கூட இருக்கலாம்.

மொத்தத்தில், உலகில் ஆதிக்கம் செலுத்துகிற பகுதிகள்(மூளையில்) யாதெனில், சுயம் என ஆரம்பிக்கும் சுயபாதுகாப்பு, மற்றும் சுயதிருப்தி போன்றவற்றின் பகுதிகளாகும். மரியாதை, நம்பிக்கை, நன்மைசெய்தல், ஆவிக்குரிய தன்மை போன்ற பக்தி ரீதியான பகுதிகள் வலுவானதாக இருந்தாலும், பொதுவாக சுயநல போக்கு என்பது அவைகளை மேற்கொண்டுவிடுவதால், அந்த நற்பண்புகள் சுயநலத்தோடுகூட கூட்டுசேர்ந்துவிடும். உதாரணமாக, சுயநலப்போக்கினால் மேற்கொள்ளப்பட்டு, கருணையில் குறைவுபட்டதைக் குறித்து இவ்வாறு கூறலாம்; நான் ஒரு பெரிய வருவாயை பெறுவதற்காக, இந்த குறிப்பிட்ட திட்டத்துக்கு கொஞ்சம் பணம் தருவேன், ஆனால் அதற்கேற்ற வருவாயை பெரியளவு காட்டாவிட்டால் நான் அதை கொடுக்கமாட்டேன். இவ்வாறு கையகப்படுத்தும் இயல்பும், சுயசித்தத்தைச் சார்ந்த மற்ற இயல்புகளும் நன்மை செய்யும் தன்மையோடு கலப்பதால், அந்த நன்மைத்தன்மை சுயத்திற்காக வளைந்துகொடுக்கும்.

இத்தகைய கலவைகளை இன்று உலகத்துக்குரிய ஜனங்கள் பார்ப்பது வழக்கமாகிவிட்டது. உன்னதமான உணர்வுகளால் திருப்தியடைய விரும்பும் தாராள மனதுடைய மனிதர்கள் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் செய்யும் எல்லாவற்றிலும் சுயம் என்பதே முதன்மையான காரணியாகிவிட்டது. சுயமரியாதை, சுயஆர்வம் – இதுபோன்ற சுயம் எங்கும் இருக்கிறது. இவை இரண்டும் கலந்த கலவையானது, சுயநல மனிதனை உருவாக்குகிறது. அவர் கனிசமான நன்மை செய்பவராக, மரியாதையுடையவராக இருந்தாலும், இந்த நற்பண்புகள் சுயநலப்போக்கினால் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

**உண்மையான மாற்றத்தை நோக்கிய முதல் படி(** First step toward true conversion)

இந்த சுயநலமான மனிதனுக்கு சுவிசேஷம் வந்தடைந்து, தனித்துவமான, விசித்திரமான ஒரு கருத்தை முன்வைக்கிறது. புதிய உறுப்புக்களின்(மூளையின்) தொகுதி மூலம் ஒரு வேண்டுகோளை வைக்கிறது. அவர் சுயத்தை அல்ல தேவனையே முதலாவதாக வைக்கவேண்டும் என இது அவருக்குக் காண்பிக்கிறது. அதுமுதல் மூளையின் உயர்ந்த மற்றும் உன்னதமான பகுதிகளானது, சிருஷ்டிகரையும், அவருடைய சிருஷ்டியாக மனிதன் தன்னுடைய பொறுப்பையும் கண்டுணர தொடங்கவேண்டும். இச்சுவிசேஷமானது அவர் சுயசெல்வாக்கு அடைதல், சுயமகிமை மற்றும் சுயமாகவே எண்ணிக்கொண்டிருப்பதை சுட்டிக் காட்டுகிறது.

அத்தகைய நபர், சுவிசேஷத்தின் கருத்தைக்கேட்டு, ஒருவகையிலோ அல்லது வேறுவகையிலோ தீர்மானிக்க முற்படலாம். நான் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றுகூட அவர் கூறலாம். அவர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டால் கேள்விக்குரிய அவரது வியாபார நடைமுறைகளை நிறுத்தவேண்டும் என சுயநலமானது ஆலோசனை தரலாம். அத்தகைய நடவடிக்கை எடுக்க தாம் கவலைப்படவில்லை என்ற முடிவுக்கு அவர் வருகிறார். ஏனெனில் அவர் கொடுக்கத் தயராக இருப்பதைக் காட்டிலும் அதிகமாக கோருவதுடன், அவர் தனது மனசாட்சியிலும் சிரமப்படலாம். ஆனாலும் பிற்காலத்தில் ஒருவேளை, துன்பமோ அல்லது சீரழிவின் காரணமோ அவர் காரியங்களைப் பற்றி வித்தியாசமான பார்வையுடையவராக விழித்தெழுப்பச் செய்கிறது. மேலும்அவர் இந்த விஷயத்தை வேறுபட்டவெளிச்சத்தில் பார்ப்பதுடன், தேவனுடைய சித்தத்தை செய்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைவார். பின்பு அவர்; என் வாழ்க்கையானது வித்தியாசமானதாக இருக்கவேண்டும் என உணருகிறேன் என கூறுவார். நான் தேவனுடைய சிருஷ்டிப்பாக உள்ளேன், அதனால் எனது அனைத்தையும் அவருக்கு அர்ப்பணிப்பு செய்வதே மிகச் சரியானதாகும். ஆனால் இந்த அர்ப்பணிப்பானது எனது வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை நான் காண்கிறேன். எனது போக்கை மாற்ற நான் கடமைப்பட்டுள்ளேன், நான் சில பழக்கங்களை விட்டுவிட வேண்டும்.

இதுவே உண்மையான மனமாற்றத்தின் முதல்படியாகும். இது பாவத்திலிருந்து நீதியை நோக்கித் திரும்புவதாகும். இருந்தபோதிலும் இந்த முதல்படியை எடுத்த கிறிஸ்துவின் சீஷராக, தெய்வீக நிபந்தனைகளை பூர்த்திசெய்யும் அளவுக்கு வருவதில்லை. நித்தியஜீவனைப் பெற என்ன செய்யவேண்டும் என அந்த இளம்

ஐசுவரியவான் கேட்டபோது, தேவனுடைய கற்பனைகளைக் கடைப்பிடிக்க– வேண்டும் என கூறப்பட்டது. அவரோ தனது வாழ்நாள் முழுவதும் இதை செய்ததாக பதிலளித்தார். இயேசு அவரை நேசித்தார்! அந்த வாலிபர் எல்லா வகையிலும் சரியானவற்றையே செய்ய முயற்சித்தார். அப்படியிருந்தும் அவர் சரியாக இருக்கவில்லையா ? இல்லை ! இயேசு அவரை நோக்கி, ''உன்னிடத்தில் எனக்கு ஒரு குறைவு உண்டு, உனக்குள்ளதை எல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிடு, அப்போது பரலோகத்தில் உன் பொக்கிஷத்தைப் பெறுவாய். பின்பு வந்து என்னைப் பின்பற்று என்றார்.

அந்த வாலிபர், இதை ஒரு விசித்திரமான ஆலோசனையாக நினைத்தார். ஏனெனில் அவர் மிகவும் முன்மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்து வந்தவர். தன்னைப் பற்றிய மதிப்பீட்டில் அவர் சரியானவராக இருந்தார், ஆனால் அவர் வெறுமனே அவ்வாறு வாழ்வதில் தனது கடமையை செய்துகொண்டிருந்தார். மோசமான வாழ்க்கை வாழவும், தவறிழைக்கவும் யாருக்கும் உரிமை இல்லை. அவர் வெறுமனே தனது கடமையைக் கழித்தாரே தவிர, இயேசு அந்த வாலிபரிடம் கூறியபடி அதை நடைமுறைப்படுத்தவில்லை.

போதகர் தொடர்ந்து பேசும்போது, என்னிடம் ஒரே ஒரு சலுகை உள்ளது, ஆனால் அது மிக உயர்ந்த ஒன்றாகும். என்னவெனில், மேசியாவின் இராஜ்யத்தில் என்னோடுகூட உடன் சுதந்தரவாளியாவதே அந்த சலுகை. என் சீஷனாக மாறுவதன் மூலம், நீங்கள் நுழையக்கூடிய வாழ்க்கையானது தெய்வீக சுபாவமான, கனம் மகிமை அழியாமையாகிய வாழ்க்கை. நீங்கள் இந்த உன்னத நிலையை அடைய விரும்பினால், வெறுமனே பாவத்தைத் தவிர்ப்பதைவிட, அதிகமானதை செய்யவேண்டும். தேவன் இப்போது பலி செலுத்துகிறவர்களை அழைக்கிறார். உங்களை நீங்களே பலிசெலுத்தாவிட்டால், எனக்கு சீஷனாக முடியாது. பலிசெலுத்துகிறவர்கள் மட்டுமே பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாக, என் மகிமையில் பங்கடைய முடியும். அவர்களுக்கு மாத்திரமே முதலாம் உயிர்த்தெழுதலில் பங்களிக்கப்படும்'' என்றார். அவ்வாலிபர் ''மிகுந்த ஆஸ்தியுடையவனாக இருந்ததால் மிகுந்த வருத்தத்தோடே போய்விட்டான்''. எத்தனைபேர் இதுபோன்ற சிந்தையில் உள்ளனர்!

பாவத்தை விட்டுவிலகுவது, மனந்திரும்புவதற்கன ஒரு படியாகும். அத்தருணமானது, ஆசரிப்புக் கூடாரத்தைநோக்கி நிஜமாக(Anti typical) செல்வது ஆகும்.'' என்னிடத்தில் சேருங்கள், அப்போது நான் உங்களிடத்தில் சேருவேன்'' என்பது பிதாவினுடைய முன்மொழிவு. நம்முடைய மீட்கும்பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த கிறிஸ்து மூலமாகவே, யாரொருவர் பிதாவினிடம் சேரமுடியும் என தேவவார்த்தையானது அதைத் தேடுவோர்க்கு சுட்டிக்காட்டுகிறது.

அவர் தேவ தயவைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டுமெனில், அவர் கர்த்தருடைய ஊழியத்திற்காகவும், சகோதர சகோதரிகளுக்காக தன்னுடைய ஜீவனையே தருவதன் மூலமும், சமயத்துக்குத் தக்கதாக எல்லா மனிதருக்கும் நன்மை செய்வதன் மூலம், அவர் கிறிஸ்துவின் சீஷராக வேண்டும். இவ்வகையில் அவர் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அங்கமாகலாம். சிலகாலத்திற்குப் பின்பு, அவர் மரணபரியந்தம் உண்மையுள்ளவராக இருந்தால், பிதாவானவர் நம் கர்த்தருக்கு தந்த கனம், மகிமையில் பங்கடையமுடியும். இராஜ்யத்தில் இயேசுவோடுகூட உடன்சுதந்திரவாளியாக முடியும்.

**ஒரு புதுசிருஷ்டியை எது உருவாக்குகிறது ?**

What constitutes a New creature?

எனவே, இந்த தியாக சிந்தனையில் தெய்வீக சித்தத்தை அவர் ஏற்றுக்கொள்ளும்போது, இவர் ஒரு புதுசிருஷ்டியாகிறார். ''பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்'' – சங் 50:5. இந்த ஒரு அழைப்பை ஏற்று, பலியின் வாழ்க்கையில் நுழைபவர்கள், தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவர். பின் அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, அதுமுதல் புதுசிருஷ்டியாகிறார்கள். அவர்களைக் குறித்து;

''பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின'' – 2கொரிந்5:7.

ஒரு தனிநபரின் எந்தப் பகுதியானது புது சிருஷ்டியாகிறது ? என்ற கேள்வி எழலாம். ஒருவருடைய சித்தம் அல்லது மனமே புதியதாகிறது. மனநிலையை உருவாக்கும் மூளையின் பெரும்பான்மையான உறுப்புக்களின் தீர்மானம் அல்லது முடிவுதான் சித்தம் என்பதாகும். சித்தமே அல்லது மனமே காரியங்களை தீர்மானிக்கிறது. நான் தொடர்ந்து பாவம் செய்யலாமா ? இல்லை. நான் பாவத்தை விட்டுவிடுவேன். நான் மேலும் சென்று, தேவனுக்கு என்னை முழுமையாக ஒப்புக்கொடுக்கலாமா ? ஆம். நான் இந்த அர்ப்பணிப்பை செய்வேன் என்று சித்தமே யோசிக்கிறது.

அவர் அவ்வாறு செய்யும்போது, தேவன் அவரை ஏற்றுக்கொண்டு, பரிசுத்தஆவியினால் ஜெநிப்பித்து, அவ்வகையில் அவரை ஒரு புது சிருஷ்டியாக்குகிறார். அந்த நபர் தன்னுடைய மனதை ஒருநிலைப்படுத்தி, விஷயத்தை தீர்மானிக்கிறார். தன் சித்தத்தின் போக்கை அவர் மாற்றுகிறார். ஒருகாலத்தில் அவருடைய விருப்பம் பாவத்தோடு சாய்ந்துஇருந்தது. அது தவறானதாகும். பின்புஅவருடைய விருப்பமானது நீதியை நோக்கித் திரும்பினது. அவ்வாறே செல்லும்வரை அது சரியானது. ஆனால் அதுவே அவரை ஒரு புதுசிருஷ்டியாக மாற்றவில்லை. பின்னர் அவர், தேவனே நான் என்னுடைய எல்லா இலட்சியங்களுடனும், நம்பிக்கைகளுடனும் மற்றும் விருப்பங்களுடன், பின் என்னையும் சேர்த்து என் வாழ்க்கையையே உம்மிடம் ஒப்படைக்கிறேன் என்று சொன்ன இடத்துக்கு வருகிறார். அதுமுதல் அவர் உலகிற்கு மரித்தவர் என கருதப்பட்டு, ஒரு ஆவிக்குரிய ஜீவியாக ஜீவிப்பதாக தேவனுக்கு முன்பாக கருதப்படுகிறார். இந்த புதிய சிந்தை, விருப்பமானது, பின் பரலோக நம்பிக்கைகளுடனும், பேரார்வத்துடனும் புதிய சிருஷ்டியை உருவாக்குகிறது.

**புது சிருஷ்டியினுடைய பொறுப்பு**

The resonsibility of the New creature

ஒருவரின் ஜெநிப்பித்தல் என்பது அந்த தந்தையின் மகன் என்பதை அடையாளப்படுத்துகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசு, பரலோகப் பிதாவினுடைய ஒரே பேறான குமாரனாக நேரடியாக ஜெநிப்பிக்கப்பட்டவர் ஆவார். மேலும் திருச்சபையார் அனைவரும் தேவனுடைய குமாரர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். “நீங்கள் பிள்ளைகளானால் சுதந்திரருமாமே. தேவனுடைய சுதந்திரரும் இயேசுகிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரருமாமே”. ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட வகுப்பாரில் கர்த்தராகிய இயேசு முதன்முதலானவர். யோர்தானில் அவருக்கு பரிசுத்தஆவி தரப்படும்போது, ஜெநிப்பிக்கப்பட்ட நிலைமையில் மனிதனாகிய இயேசு என தேவனால் இது முதற்கொண்டு எண்ணப்படவில்லை. ஆனால் புதுசுபாவமாகிய இந்த பொக்கிஷத்தை, கல்வாரியில் தம்முடைய பலியை நிறைவேற்றுகிறவரைக்கும் மண்பாண்டமாகிய இந்த பூமிக்குரிய சரீரத்தில் பெற்றிருந்தார். பின்னர் உயிர்த்தெழுதலில் தேவன் அவருக்கு தெய்வீக சுபாவமாகிய பரிபூரண ஆவிக்குரிய சரீரத்தை கொடுத்தார்.

இப்படியாகவே, இயேசுவின் சீஷர்கள் அனைவரிடமும் இருக்கும். தேவனிடம் தங்களை முழுவதும் ஒப்படைக்க அழைக்கப்படுகிறார்கள். எஜமானரை பின்பற்றுகிறவர்களாவதற்கு பூமிக்குரிய நலன்களை அர்ப்பணம் செய்ய அழைக்கப்படுகிறார்கள். இயேசு நிபந்தனைகளைக் குறிப்பிடும்போது, முதலாவதாக, மேசியாவாகிய தம் மீட்பர்மேல் விசுவாசம் வைக்கவேண்டும். இரண்டாவதாக, தன்னைத தான் வெறுத்து, சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றவேண்டும். அவர்கள் தேவனுடனான உறவில், மற்றவர்களைக் காட்டிலும் எந்தவகையிலும் வேறுபட்டவர்களாக இருப்பதை உலகம் அறியாவிட்டாலும், இந்த புதிய சிருஷ்டிகள் அனைவரும் தேவனுடைய புத்திரர்களாவர். “உலகம் அவரை(குருவை) அறியாதபடியினாலே நம்மையும்அறியவில்லை” – 1யோவா3:1. இந்த புதிய சிந்தையானது வளரவேண்டும். இந்த புதிய சிருஷ்டி அறிவிலும் திறனிலும் வளரவேண்டும்.

இவை அனைத்தும் பழையசிருஷ்டியாக இருந்ததைவிட, இப்போது அந்நபரை வித்தியசமாக்குகின்றன. சுபாவத்தின்படி அவர் விழுந்துபோனவராக, அவர்தம் மாம்சத்தில் வன்மையான உணர்வுகளையும் ஆசைகளையும் உடையவராக இருந்தாலும், அவர் இப்போது நல்ல மனதுடன், கர்த்தருடைய வழியில் நடத்தப்பட்டு, படிப்படியாக பிதாவின் நேச குமாரனின் சாயலாக மாறுவார். இந்த சாயல் முதலாவது இருதயத்தின் சாயலாகும். இந்த மாற்றம் அவருடைய வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும், அவருடைய சரீரத்தை புதிய சிந்தைக்கு ஏற்ப மென்மேலும் இணங்கச் செய்கிறது.

**பரீட்சிக்கப்படும் புதிய சிருஷ்டி** (The New creature on trial)

இந்த புதிய சிந்தை , புதிய சித்தமாகிய, ஆவியிலும் ஜெநிப்பிக்கப்பட்ட இந்த புது சிருஷ்டியானது, பழைய சரீரத்தை தற்போதைய குடியிருப்பாகக் கொண்டிருக்கிறது. மேலும் இந்த சரீரமே புதியசிருஷ்டி செயல்படுவதற்கான ஒரே கருவியாக இருக்கிறபடியால், இந்த சரீரமானது பாவத்தையும், அதிலுள்ள பெலவீனங்கள் மற்றும் வீழ்ந்துபோன தன்மைகளையே நோக்கியுள்ளதால், புதுசிருஷ்டிக்கும் பழைய சிருஷ்டிக்கும் இடையே ஒரு தொடர்ச்சியான போராட்டம் இருக்கிறது.இரண்டில் ஏதாவதொன்று அழிந்துவிடும்படியான தினசரி போராட்டமாகும். இந்த புதிய சிருஷ்டியானது எச்சரிக்கையாக, முற்றிலும் சுறுசுறுப்பாக, தேவனுக்கு முற்றிலும் உண்மையாக இல்லாவிடில் மாம்சத்தின் பலவீனங்கள் படிப்படியாக தங்களை உறுதிப்படுத்திக் கொள்வதுடன், புதியசிருஷ்டியானது மரித்துவிடும் அபாயத்திற்கு போய்விடும்.

அதற்கு மாறாக, புதிய சிருஷ்டியானது தேவனுக்கு முன்பாக உண்மையாகவே இருந்தால், பழைய சிருஷ்டி அழிந்துவிடும். மோதல் முடிவதற்குள் ஒன்று அல்லது மற்றொன்று கண்டிப்பாக மரிக்கவேண்டும். இப்போராட்டம் முடிவுவரையிலுமானதாகும். இது புதியசிருஷ்டிக்கான சோதனையேயன்றி, பழைய சிருஷ்டிக்கானதல்ல. புதிய சிருஷ்டியானது கனம், மகிமை, அழியாமைக்காக அழைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை அடைவதற்கு, சந்தேகத்திற்கிடமின்றி அது தேவனுக்கு உண்மையாக இருப்பதை நிரூபிக்கவேண்டும். புதிய சிந்தையானது எந்தளவு கட்டுப்படுத்துகிற விஷயத்தில் உள்ளதோ, அந்தளவுக்கு நாம் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுப்போம். அதே விகிதத்தில் புறத்தில் உள்ள சக்திகளுடனும், தற்கால நிலைமைகளோடும் போராடுவதில் நமக்கு வலிமை இருக்கும். மேலும் நம்முடைய மாம்சத்தோடு போராடுவதில் அதிகப்படியான வெற்றி கிடைக்கும்.

இந்தவொரு போராட்டத்தில் சில சமயங்களில் அதிக மற்றும் குறைவான வெற்றி பெறலாம். ஆனால் ஜெயம் அடைந்தாலொழிய கர்த்தர் வெகுமதியை அளிக்கமாட்டார். ‘‘ஜெயம் கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு என் சிங்காசனத்தில் உட்காரும்படி அருள்செய்வேன்’’. தேவனுக்கும் நீதியின் கோட்பாடுகளுக்கும் நம்முடைய உடன்படிக்கைக்கும் உண்மையுள்ளவர்களாக காண்பிப்பதே காரியமாகும். தேவனுக்கு முன்பாக அதிக உண்மையுள்ளவர்களாயும், அதிக பயபக்தி உடையவர்களாகவும் யார் இருக்கிறார்களோ, அவர்களே முற்றிலும் ஜெயம் கொண்டவர்களாவதுடன், மிக உன்னத பரிசைப் பெறுபவர்களாக, இயேசுவோடுகூட சிங்காசனத்தில் அமருவார்கள்.

சிலர் உன்னத நிலைமை அடையாதவர்களாக, விசேஷமான உபத்திரவங்கள், உதவியோடு ஜெயம் கொண்டவர்களாக வருவர். ஆனால் உன்னத நிலைப்பாட்டை அவர்கள் அடையத் தவறினாலும், ஜெயம் கொண்டவர்களாகவே இருப்பர். இல்லையெனில், பரலோக ஆசீர்வாதத்திலும், ஜீவனிலும்கூட ஒருபோதும் பங்கடையமாட்டார்கள். இவர்கள் திராளான கூட்டத்தாராக உருவெடுப்பவர்கள். ‘‘மகா உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள், ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தால் தோய்ந்து வெளுக்கப்பட்டவர்கள்’’ – வெளி 7:14. அவர்கள் முற்றிலும் ஜெயங்கொண்டவர்களான மணவாட்டி வகுப்பாருக்கு கனமிக்க ஊழியக்காரர்களாக மிகுந்த அனுகூலமடைவர்.

**சோதனையில் விழுவது பாவமல்ல**

Falling into temptation not sin

புதிய சிருஷ்டிக்கும், அந்த புதிய சிருஷ்டி குடியிருக்கும் சரீரத்தின் குறைபாடுகளுக்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தின்போது, இந்த புதிய சிந்தையானது வளர்ச்சியடைந்து, படிப்படியாக வலுவாகவேண்டும். ஒருவர் புதிய சிருஷ்டியாக கருதப்படுவதற்கு முன்னர் சரீரத்தின் சித்தம் முற்றிலும் மரித்ததாக கருதப்படவேண்டும். ஆனால் சரீரத்தில் உள்ள மூளையனது முந்தைய அதே போக்குகளிலேயே உள்ளது. இந்த சரீரத்தை கிறிஸ்துவின் சித்தத்திற்கு முற்றிலும் அடிபணியச் செய்வதே புதிய சிந்தையின் வேலையாகும். தேவனுடைய பிள்ளையானவர், வியாபாரத்தினாலோ அல்லது சிற்றின்பத்தினாலோ கவர்ந்திழுக்கப்–படுவாரானால், புதிய சிருஷ்டியான அவரை ஏறக்குறைய முட்டாளாக்கிவிடும். புதிய சிருஷ்டியின் இந்த முட்டாள்தனமான சூழ்நிலையில், மாம்சமானது நன்றாகவே விழித்தெழுந்து, அநுகூலத்தைப் பெறலாம். ஏனெனில் தேவ பிள்ளையான அவர், மனப்பூர்வமான பாவம் செய்ததினலோ அல்லது உள்நோக்கத்தில் அலட்சியமாக இருந்ததாலோ அல்ல. மாறாக அது ஏறக்குறைய சோதனையின் விளைவாகும். ஆனால் சோதனையின்கீழ் இவ்வாறான விளைவை அடைவது ஒன்று, மற்றொன்று வேண்டுமென்றே பாவத்திற்குள் செல்வதாகும். மனப்பூர்வமாக பாவம் செய்கிறவன் சாத்தானின் பிள்ளையாக எண்ணப்படுகிறான். ஏனெனில் தேவஆவிக்கு பதிலாக சாத்தானின் ஆவியை உடையவனாகிறான்.

ஒரு சமயத்தில், தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களில் யாராகிலும் மனப்பூர்வமாக பாவம்செய்ய விரும்பும் பழக்கமுடையவராகிவிட்டால், அவர் தேவனுடைய புத்திரரானதை நிறுத்திவிட்டு, பேலியாளின் மகன்களாகிவிட்டனர் என்பதைக் காட்டுகிறது. அவர்கள் புதிய வாழ்க்கைக்காக ஜெநிப்பிக்கப்பட்ட அந்த உயிர்ப்பொறி அணைக்கப்பட்டுவிட்டதை காட்டுகிறது. ‘‘தேவனால் பிறந்தவன் பாவம் செய்யான்’’. அவன் பகிரங்கமாக, மனப்பூர்வமாக பாவம் செய்தால், அந்நொடிப்பொழுதே தேவனுடைய பிள்ளையாக இருப்பதை நிறுத்திக் கொள்கிறான். தேவனுடைய புத்திரர் பாவத்தை விரும்புவதில்லை. ஆகவே யாரொருவர் வேண்டுமென்றே பாவத்திற்குள் சென்றால், அவருடைய புதிய சிந்தையானது முற்றிலும் மறைந்துவிட்டது என்பதற்கான ஆதாரமளிக்கிறார். மேலும் உடன்படிக்கையின்போது அவர் மாம்சத்திற்காக மரித்ததுபோல, இப்போது தேவனுக்கு முன்பாக மரித்தவராகிறார்.

அநேகர் மனப்பூர்வமாகவும், புத்தி சுவாதீனத்தோடும், தைரியமாக தேவனுக்கு எதிரான நடவடிக்கையை ஒருபோதும் எடுக்கமாட்டார்கள் என நம்புகிறோம். அதினால் உயரிய பலர் இரண்டாம் மரணத்திற்குள் செல்லமாட்டார்கள் எனவும் நாம் நம்புகிறோம். இருப்பினும், இந்த அழிவுகரமான நிலையிலிருந்து தேவனுடைய பிள்ளைகள் முடிந்தவரை தூரமாக விலகி இருக்கவேண்டும். இந்த நிலைமையானது படிப்படியாக, படிப்படியாக நிதானமாக அடையவேண்டிய ஒன்றாகும். நாம் முதலில் தேவனிடத்தில் வரும்போது, பாவத்தை நிராகரித்தோம். பின்னர் நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கும் அந்நேரத்தில் நாம் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். ஆனால் அதற்கு மாறானவைகளில் நீதியை நிராகரிப்பவர்கள், பொதுவாக படிப்படியாக பின்னோக்கி செல்கிறார்கள். ஒவ்வொரு படியாக பாவத்தில் ஈடுபடுவதன்மூலம், தேவனிடமிருந்து படிப்படியாக விலகும்படி நடத்தி, புதுசிருஷ்டியே இல்லாமற் போகுமளவுக்கு செய்துவிடும்.

**மாம்சத்தினால் புதிய சிருஷ்டி ஊனமுற்றது**

New creature handicapped by flesh

அப்.யோவான், தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் பாவம் செய்யமாட்டார்கள் என்று நம் திறவுகோல் வசனத்தில் கூறும்போது, அது மனப்பூர்வமான பாவம் அல்ல என்கிறார். அப்படியானால் மனப்பூர்வமான பாவத்தைத் தவிர பாவஞ்செய்வதற்கான வேறு ஏதாகிலும் வழி உண்டா? நாங்கள் ஆம் என்று பதிலளிக்கிறோம். அது மரணத்துக்கேதுவான மனப்பூர்வமான பாவமாகும். "எல்லாரும் தேவனுடைய மகிமைக்கு குறைவுபட்டவர்களாகி, அதாவது, ஒருவரும் பரிபூரணர்கள் இல்லாமல், அதாவது, "நீதிமான் ஒருவனும் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" என்று வேதாகமம் நமக்குக் கூறுகிறது. திருச்சபையின் அங்கத்தினர்கள்மேல் செலுத்தப்பட்ட நீதியானது, அவர்களுடைய மாம்சத்தின்மேல் செலுத்தப்பட்டதாகும். புதிய சிருஷ்டியானது தன்னில் பரிபூரணமானது. ஆனால் கிறிஸ்துவின் சீஷராக, புதிய சிருஷ்டியாக, அதின் மாம்சத்திலிருக்கும் பாவம் மற்றும் மரணம் போன்ற முந்தைய எல்லாவற்றையும் களைந்துபோட விரும்புகிறார்.மேலும் தேவனைப்போன்றும், அவருடைய சாயலுக்கும் தன்னை இணக்கமாக்கவும் விரும்புகிறார். ஆயினும் அவர் தனது சொந்த மாம்சத்தின் பெலவீனங்களால் மாத்திரமல்ல, மற்றவர்களுடைய மாம்ச பெலவீனங்களினாலும் ஏறக்குறைய ஊனமுற்றவராக இருக்கிறார். தன்னுடைய விழுந்துபோன சுபாவத்தின் தீமையான போக்குகளுடனும், தன்னைச் சுற்றியிருக்கிறவர்களுடனும் அவர் போராட வேண்டும்.

அதே அப்போஸ்தலன் கூறுவதுபோல; "நமக்குப் பாவமில்லையென்போமானால்.. சத்தியம் நமக்குள் இராது.. நாம் தேவனைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்" **(1யோவா1:8–10).** ஒரே எழுத்தாளரின் இந்த இரண்டு கூற்றுகளும், இசைவானதாக உள்ளது. நம்முடைய ஆதார வசனத்தின் கருத்தானது, புதிய சிருஷ்டிக்கே பொருந்தும். இதே வசனபகுதியானது, அவருடைய மாம்சீக சரீரத்திற்கு பொருந்தும். அவர் தன்னுடைய பெலவீனங்களை முன்னிட்டும், தன்னை சுற்றிலும் உள்ள வஞ்சகம் மற்றும் சாதகமற்ற சூழ்நிலைகளின் காரணமாக, அவர் தனது மாம்சத்தில் இருக்கும் பாவத்தை முற்றிலும் தவிர்க்கமுடியாது.

இருந்தபோதிலும், இந்த புதிய சிருஷ்டிகள் தேவனுடைய புத்திரர்களாக, தேவனுடைய அன்பில் தங்களை தக்கவைத்துக் கொள்கிறார்கள். "நீதிபரராகிய இயேசுகிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்**(1யோவா2:1).** தேவன் நம்முடைய பெலவீனங்களை அறிந்திருக்கிறார். மேலும் அதற்கான ஏற்பாடுகளையும் நமக்குச் செய்திருக்கிறார். தேவனுடைய அன்பில் நிலைத்திருக்கும்போது நாம் சுத்தமுள்ளவர்களாக இருக்கிறோம்.

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால்... எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" **– 1யோவா1:9.** நம்முடைய அன்றாட மீறுதல்களை கர்த்தரிடத்தில் ஒப்புக்கொள்வதுடன், மன்னிப்பைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். "எங்களுக்கு எதிரான மீறுதல்களை நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்" என்று நாம்அன்றாடம் ஜெபிப்போமாக.

**பகுதியளவு மனப்பூர்வமான பாவங்களுக்கான சிட்சைகள்** (Stripes for partially wilful sins)

மாம்சத்தின் பெலவீனங்களினாலோ, அல்லது அறியாமையினாலோ அல்லது முட்டாள்தனமாகவோ இந்த மீறுதல்கள் இருந்தால், வேண்டிக்கொள்ளப்படும் பட்சத்தில் அப்பாவங்கள் கர்த்தரால் முற்றிலும் மன்னிக்கப்படும். புதிய சிந்தை மந்தமாக இருந்து, பாவம் நேரிட்டிருக்குமானால் அதாவது போதுமான அளவு முற்போக்கான தன்மை இல்லாததினால் ஏறக்குறைய குற்றஞ்சாட்டப்பட்ட நிலையிருந்தால், அந்த அளவுக்கு புதிய சிருஷ்டியே பொறுப்பேற்கவேண்டும். இதுபோன்ற எல்லா

மீறுதல்களுக்கும் புதிய சிருஷ்டி எந்த வகையிலும் தவறு செய்தால், அங்கே சிட்சைகள் அல்லது தண்டனைகள் இருக்கும். இந்த பகுதியளவு மனப்பூர்வமான பாவத்திற்கு புதுசிருஷ்டியே பொறுப்பாகும். இது ஆதிபாவம் மற்றும் அதின் அபரிபூரணமான விளைவுகளினால் வந்த பாவங்களுமல்ல.

ஒரு கிறிஸ்தவன் இயல்பாகவே கோபமடையும் போக்கை உடையவனாக இருக்கலாம். மேலும் அப்போக்கை முற்றிலும் கட்டுப்படுத்துவது என்பது அவருக்கு இயலாமல் இருக்கலாம். அவர் தமது இயல்பான மனப்பாங்கின்மேல் தன் கட்டுப்பாட்டை இழக்கும் தன்மையானது, அவரை சிக்கலில் சிக்கவைக்கும் என அவர் ஒரு புதியசிருஷ்டியாகுமுன்பே உணர முடியும். இதுபோன்ற சூழ்நிலையில் இப்புதிய சிருஷ்டியானது ஜெபத்தினாலும், தொடர் முயற்சியினாலும் இதை மேற்கொள்ள தன்னால் இயன்றவற்றை செய்யவேண்டும். இவ்விஷயத்தில் நேரிடும் ஒவ்வொரு தோல்விக்கும், அவசியமெனில், தன்னைத் தான் வெறுத்தல் போன்ற அபராதத்தை தனக்குத்தானே ஒருவேளை சுமத்திக் கொள்ளலாம். ஆனால் இது என்னுடைய மாம்சம், அதற்கு என்னால் உதவமுடியாது என புதிய சிருஷ்டியானது கூறுமேயானால், அதற்குரிய சிட்சைகளை அவர் பெறுவதோடு, அவருக்கும் கர்த்தருக்குமிடையே ஒரு பூமிக்குரிய மேகம் எழக்கூடும். அவர் பிதாவிடம் திரும்பி, சரியான திருத்தங்களை செய்து, மீண்டும் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும்வரை ஆவிக்குரிய வகையில் நோய்வாய்ப்படுவார். ஆனால் இந்த மனப்பான்மை தொடருமானால், அவர் சிறுமந்தை வகுப்பாரில் ஒரு அங்கத்தினராவதற்கு, எப்போதும் எதிராக இருப்பதுபோல் தோன்றுகிறது. அவர் தமது உரிமைக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ முற்போக்கான முடிவை எடுக்கவேண்டும்.

எனவே, மன்னிக்கமுடியாத, ஆனால் தண்டனைக்குரிய பாவங்கள் உள்ளன. மனப்பூர்வமான பாவமாகிய மீறுதலானது முழு அளவை எட்டும்போது, அது மரணத்துக்கேதுவான பாவமாகும். இதன் பொருளானது புதிய சிருஷ்டியானது இல்லாமல் போய்விட்டது என்பதாகும். ஏனெனில் தேவனுடைய புத்திரர் மத்தியில் கிரியை செய்யும் தேவ ஆவியானது, எப்போதும் நீதியை விரும்பச்செய்து, அக்கிரமத்தை வெறுக்கச் செய்யும். தேவனில் அன்புகூறுகிறவன், “தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்” – 1யோவா5:18.

**சோதனைகள் மூலம் நிறைவேற்றப்படும் நோக்கம்** (The purpose served by trials)

ஆனால் அப்போஸ்தலர் கூறுவதுபோல, இந்த புதிய சிந்தையாகிய பொக்கிஷத்தை இம் மண்பாண்டத்தில் பெற்றிருக்கிறோம். பரலோக சித்தமும் பூமிக்குரிய சரீரமுமாகிய, பரலோகத்துக்குரிய மற்றும் பூமிக்குரிய சேர்க்கையாக நாமிருக்கிறோம். சில சமயங்களில் சரீரமானது புதிய சிருஷ்டியை சோதனைக்குள்ளாக்கி, செய்துகொண்ட உடன்படிக்கையை கைவிடுமாறு வலியுறுத்துகிறது, பூமிக்குரிய இந்த சரீரமானது வெறுமனே மரித்ததாக கருதப்படுவதனால், அவருக்கு சிரமமாகிறது. ஆனால் தேவனோ தம்முடைய வாக்குத்தத்தங்களுக்கு இசைவாக, பழைய பூமிக்குரிய சுபாவத்தைப் புறக்கணித்து, புதிய சிந்தையானது உண்மைத்தன்மையோடு உள்ள வரைக்கும், பரலோகத்துக்குரிய அதை மட்டுமே அங்கீகரிக்கிறார். ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அவர் வாக்களித்திருக்கிறார்.

முன்பு கூறியதுபோல், புதிய சிந்தை அல்லது சித்தமானது தற்காலிகமாக மயக்கமாகவும், செயலற்றதாகவும் மாறக்கூடிய ஒரு காலம் வரக்கூடும். இது புதிய சிருஷ்டிக்கு பெரும் ஆபத்துக்காலம், மிகவும் கவனத்திற் கொள்ளவேண்டிய ஒன்றாகும். இப்பொழுது எந்தவொரு தற்காலிகமான விலகலுக்கும் இடமளிக்காத, தேவனுக்கென தீர்மானமான சித்தம் மற்றும் முற்போக்கான சித்தம் இருக்கவேண்டும். இல்லையெனில், புதிய சிருஷ்டியானது இல்லாமற் போய்விடும். புதிய சிந்தைக்கும் பழைய சரீரத்திற்கும் இடையிலான போராட்டம் தொடர்கையில், அச்சூழ்நிலையில் புதிய சிந்தையானது விழிப்போடு இருக்கும் பட்சத்தில், அது மென்மேலும் வலிமை பெறும். ஆயினும் தேவன் மாம்சத்தை மேலும் மேலும் கடுமையான சோதனைக்குட்பட அனுமதிக்கலாம். அவர் புதியசிருஷ்டியின் உண்மைத்தன்மையை பரிசோதித்து நிரூபிக்க, மாம்சத்தின் மீது உலகத்தையும் எதிராளியையும் அனுமதிக்கிறார். நம்முடைய கர்த்தர் “மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் உண்மையுள்ளவராக காணப்பட்டதினால், அவர் தெய்வீக சுபாவத்திற்கு தகுதியானவராக கருதப்பட்டார். ஆகவே அவருடைய அடிச்சுவட்டை பின்பற்றுகிறவர்களிடமும் இதேபோன்று இருக்கவேண்டும். நாம் எந்த அளவுக்கு நிற்கமுடியும் என பிதாவிற்கு தெரியுமாதலால், நம்முடைய திராணிக்கு மேல் நம்மை சோதிக்காதபடி அச்சோதனையுடன்கூட தப்பிக்கும் போக்கையும் உண்டாக்குவார் – 1கொரிந்10:13.

**ஏன் சிலர் ஜெயங்கொள்ளத் தவறுகின்றனர் ?** (Why some fail to overcome?)

எனவே அனுபவங்களின் பாதையானது தொடர்கின்றன. அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோல, நாம் புதிதான வாழ்க்கையில் நடப்பதற்காக எழுப்பப்பட்டிருக்கிறோம். அதாவது நம்முடைய உயிர்த்தெழுதல் ஏற்கனவே தொடங்கிவிட்டது(ரோமர்6:4; கொலோ3:1). மேலும் எந்தளவுக்கு நாம் கர்த்தருடைய தொடுதலுக்கு அதாவது ஒழுக்கரீதியான அனுபவங்களுக்கு உடன்படுகிறோமோ, அந்தஅளவுக்கு இந்த புதிய வாழ்க்கைக்கான ஓட்டமானது மென்மேலும் உற்சாகமுள்ளதாகவும், மென்மேலும் வெற்றிகரமானதாகவும் இருக்கும். மேலும் அவர் விரும்புகிறபடி நம்மை வனைய நாம் இடங்கொடுத்தால், இறுதியில் நம்முடைய ஓட்டத்தை நாம் நிறைவுசெய்து, பூமிக்குரிய மனித சுபாவத்திலிருந்து பரலோகத்துக்குரிய தெய்வீக சுபாவத்திற்கான, முழுமையான உயிர்த்தெழுதலில் கொண்டுவரப்படுவோம். பூமிக்குரிய சரீரத்தில் முன்னேறி வருகின்ற புதிய சித்தமானது, பின்னர் பரலோகத்துக்குரிய குடியிருப்பில் இருக்கும்படி முன்னேறிவிடும். உயிர்த்தெழுந்து மகிமையடைந்த இயேசுவைப் போன்ற ஒரு சரீரத்தை அது பெற்றுக்கொள்ளும் – 1யோவா3:1,2.

முழுமையாக வெற்றிகொள்ளாதவர்கள், ஓரளவு எதிராளியின் தாக்குதல்களுக்கு உட்பட்டு, தாங்கள் அதிக விசேஷமானவர்களாக இருப்பதை தவிர்க்க முயற்சிமேற்கொள்வர். தங்களுடைய நண்பர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதை தவிர்ப்பர். ஏனெனில் அவர்கள் ஏறக்குறை உலகக் கவலைகளினாலும், ஐசுவரியத்தின் மயக்கத்தினாலும், சிற்றின்பங்களினாலும் மூழ்கிப் போயிருக்கிறார்கள். இவர்கள் பாரமான யாவற்றையும் விட்டுவிட்டு, தங்களுக்கு முன் வைக்கப்பட்ட ஓட்டத்திலே பொறுமையோடே ஓடவேண்டும் என அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். அவ்வகுப்பார் ஒரு கணப்பொழுதாகிலும் தங்களுடைய ஓட்டத்தை விட்டுக்கொடுக்க நினைப்பதில்லை. ஆனால் ஏற்றவேளையில் அக்கினி போன்ற உபத்திரவங்களுக்கு ஆளாக நேரிடும். அது அவர்களின் மாம்சத்தை அழிக்கும். ஆயினும் அதிக உண்மையுள்ளவர்கள் பெறுகின்ற பரம அழைப்பின் பந்தயப்பொருளை இழப்பார்கள்.

---------

**R 5442**

## "மகாநாளின் நியாயத்தீர்ப்புக்குரிய இயல்பான தன்மையும் நோக்கமும்"

## "THE GREAT DAY OF JUDGMENT - ITS NATURE AND OBJECT'

**ஆதார வசனங்கள் : யூதா 14,15; சங்கீதம் 98:7–9**

"இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும்,. அவர்களைக் கண்டிக்கிறதற்கும் ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார்"

"சமுத்திரமும் அதன் நிறைவும் பூச்சக்கரமும் அதின் குடிகளும் முழங்குவதாக; கர்த்தருக்கு முன்பாக ஆறுகள் கைக்கொட்டி, பர்வதங்கள் ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடக்கடவது. அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார், பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார் "

சுவிசேஷயுகத்தின் இறுதியிலும், ஆயிர வருடாட்சியின் ஆரம்பத்திலும் நடைபெறும் மகாநாளின் நியாயத்தீர்ப்பை, மேற்கண்ட ஆதாரவசனங்கள் தொடர்புபடுத்திப் பேசுகின்றன. இந்த ஆதார வசனங்கள் கூறாதவை எவை என்று முதலில் நாம் கவனிக்கவேண்டும். நம் கர்த்தராகிய இயேசு பூமியை அழிக்க, உலகை அக்கினியால் சுட்டெரிக்க வருகிறார் என்று அவைகள் கூறவில்லை. மரணத்தின்போது, பகுதியளவிலான நியாயத்தீர்ப்பு நடைபெறும் என்று அவைகள் பேசவில்லை, பின்னாளில் அவர்களுடைய முறையான இடங்களாகிய– பரலோகத்திலிருந்தும் உத்தரிக்கும் ஸ்தலத்திலிருந்தும், வாதிக்கும் நரகத்திலிருந்தும் எல்லோரும் கொண்டுவரப்பட்டு, அதே இடங்களுக்கு மீண்டும் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று இங்கு கூறப்படவில்லை. ஆனால் இவ்வாறு வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளதாக புனையப்பட்டு, நமக்கு போதிக்கப்பட்டது. பரிசுத்த வேத எழுத்துக்களோடு, நம் தப்பெண்ணங்களையும் தவறாக புரிந்துகொள்ளுதல்களையும் இணைத்ததால் தவறான பொருள் வெளிப்பட்டது. உலகிற்கு தேவஅன்பு நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருகிறது.

முதலாவது நியாயத்தீர்ப்பு அல்லது பாவத்துக்கான தண்டனை என்பது மரண தண்டனையாயிருந்தது. ஆதாமின் பாவத்தினிமித்தமாக முழு உலகமும் இந்த

தண்டனைக்குட்பட்டு, ஜீவ நிலையிலிருந்து துண்டிக்கப்பட்டு, அழிவுறவேண்டும். ஆனால் தேவன் மனுக்குலத்தின் மீது இரக்கமும் மனதுருக்கமும் கொண்டு, இந்த மனுக்குலத்துக்கு மற்றொரு பரீட்சையை ஏற்பாடு செய்திருக்கிறார். அவர்கட்கு அளிக்கப்படும் அனுபவங்கள் மூலம் பாவத்தைப் பற்றியும், அதன் பலன்களைப் பற்றியும் அறிந்துணரச் செய்கிறார். முதலாவது சோதனை ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மட்டுமே வந்தது. ஆயினும் மனித குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்துக்கும் நித்திய ஜீவனுக்கான தனிப்பட்ட பரீட்சையைக் கொடுத்து, தயவுள்ள சூழ்நிலைகளின்கீழ் அவர் தேவனோடு இசைவுக்குள் வருகிறாரா என்று நிரூபிக்கப்படவேண்டும்.

**குணாதிசயமே நியாயத்தீர்ப்பின் அடிப்படை**

ஆகவே மனித சந்ததியானது நித்திய ஜீவனடையும் நம்பிக்கைகள் அனைத்தும், வருங்கால பரீட்சையின் முடிவையே சார்ந்துள்ளது. ஆண்களும் ஸ்திரீகளும் இந்த ஜீவியத்தில் குணாதிசயங்களை உருவாக்குகின்றனர். அதில் அவர்கள், ஒன்று அபிவிருத்தியடைவர், அல்லது தரம் தாழ்ந்தவர்களாக்கிக் கொள்வர். தற்கால சாதகமில்லா நிலைமையின் கீழ், யாரெல்லாம் தன்னால் இயன்றளவு சிறப்பாக முயற்சிசெய்கிறார்களோ, அவர்கள் அந்த தனிப்பட்ட பரீட்சைக்குள் அல்லது நியாயத்தீர்ப்புக்குள் நுழையும்போது, துரிதமாக முன்னேறிச்சென்று, அந்நாளில் பரிபூரணம் என்கிற மேலான நிலையை அடைவர்.

உலகத்திற்கான இந்த ஏற்பாட்டிலிருந்து கிறிஸ்துவின் சபை விதிவிலக்கு பெற்றுள்ளது. அந்த சோதனையில் சபையார் பங்குபெறுவதில்லை. ஏனெனில் அவர்கள் விசேஷமாக அழைக்கப்பட்ட வகுப்பார். இவர்கள், உலகம் எதிர்கொள்வதற்கு முன்பாகவே தங்கள் சோதனைகளை பெற்றுக்கொள்கிறார்கள். ஜீவன் அல்லது நித்திய மரணம் என்கிற சோதனையின்கீழ் அவர்கள் தற்போது இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் அடையும் ஜீவனுக்கான சோதனைகள், தெய்வீக நிலைமைக்குரியவை. கர்த்தரால் தற்போது கையாளப்படுகிறவர்கள், உண்மையுள்ளோராக இருப்பார்களானால், அடுத்த யுகத்தில் உலகிற்கு நியாயாதிபதிகளாக கர்த்தரோடுகூட இருப்பார்கள். இதைக்குறித்து 1கொரிந்தியர்6:2ல் வாசிக்கிறோம்; "பரிசுத்தவான்கள் உலகை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா?" வெகுமதிகளையும் தண்டனைகளையும் சந்திக்கும் காலமாக அது இருக்கப்போகிறது.

தீமைசெய்கிற ஒவ்வொருவரும், தன் தீய நோக்கத்திற்காக தண்டனையைப் பெறுவார்கள், சீர்பொருந்துவதற்கான அடிகளைப் பெறுவார்கள். நன்மை செய்கிற ஒவ்வொருவரும், வெகுமதியை அடைவர்.

தேவனோடு எவ்வளவுதூரம் அவர்கள் இசைவற்றிருக்கிறார்கள் எனறு ஆயிரமாண்டு நியாயத்தீர்ப்பின் நாளின் பணியானது மனிதருக்குக் காண்பிக்கும். அவரோடு இசைவாவதற்கு எப்படி வரவேண்டும் என்றும்அவர்களுக்கு காண்பிக்கும். ஆயிரமாண்டு யுக முடிவின்போது ஒருவரும் அறியாமையில் இருக்கமாட்டார்கள். "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்"(ஏசா11:9). மேலும் அவர்கள் முன்பு அடைந்திருந்த வெளிச்சத்தின்படியும், அதற்கு எதிராக பாவம் செய்திருந்தால் அதன்படியுமே நியாயத்தீர்ப்பு செலுத்தப்படும் என்று வேத வசனங்கள் நமக்குக் கூறுகின்றன. மனப்பூர்வமான பாவி, 100ஆண்டுகள் சோதனைக்குப் பிறகு, இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்.

அந்நேரத்தில் கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தும் அனைவரும், குணாதிசயத்தில் மேம்பாடு அடைந்து, பரிசுத்தத்தின் பெரும்பாதையில் படிப்படியாகவும், அதிகதிகமாகவும் முன்னேறுவார்கள். ஆதாம் இழந்துபோன தேவ சாயலையும், பூமிக்குரிய முழு பரிபூரணத்தையும் அடையும்வரை அவர்கள் அதிகதிகமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள். இதுவே கிறிஸ்துவின் மீட்கும்பணியின் மகிமையான பலனாக இருக்கும். அப்பொழுது, தேவமகிமையை ஒவ்வொரு நாவும் அறிக்கையிடும், ஒவ்வொரு முழங்காலும் மண்டியிடும். பாவத்தை தொடர்ந்து பிடித்திருப்போர், முடிவில், முழுமையாக, இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். அதன்பிறகு ஒரு தூய்மையான பிரபஞ்சத்தை தேவன் அடைந்திருப்பார்.

**கர்த்தரின் மகாநாள் தற்போது இங்கே இருக்கிறது**

கர்த்தரின் மகாநாளின் துவக்கத்தில் நாம் தற்போது இருக்கிறோம். இந்த பலமிக்க எழுச்சியான மேசியாவின் ஆளுகையை அறிமுகப்படுத்துவதற்காக எல்லா சக்திகளும் துரிதமாக ஒன்றிணைந்து, தன்தன் பங்கை ஆற்றும். பூமியின் தேசங்களுடன், தற்போது பூமியின் அமைப்புக்களாகிய அரசியல், பொருளாதார மற்றும் மத அமைப்புக்கள் சேர்ந்து உருவாகியிருக்கிற பல்வேறு மூலக்கூறுகளடங்கிய சமுதாயம், இப்போது நியாயசங்கத்திற்கு முன்பாக நிற்பதோடுகூட, குறைவுள்ளதாகக் காணப்படுகிறது. இன்றைக்கு வந்துகொண்டிருக்கிற இந்த பலத்த சக்திகள் முன்பாக,கிறிஸ்தவ மண்டலம் முழுவதும் திகிலடைந்து வருகின்றன. ஒழுக்க நெறிகள் தாழ்ந்த நிலையிலுள்ளன. உடன்படிக்கையின் தூதனானவர் மாபெரும் நியாயாதிபதியாக தற்போது பிரசன்னமாகி

அமர்ந்திருக்கிறார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி பரிசீலனைக்காக கேட்டதுபோல, நாமும் ஒரு கேள்வியைக் கேட்கலாம் : "அவர் வரும் நாளை(தற்போது வந்திருக்கிற) சகிப்பவன் யார் ? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார் ? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, ... அவர்களைப் பொன்னைப் போலவும், வெள்ளியைப் போலவும் புடமிடுவார்" – மல்கி 3:1–3.

ஆ ! உலகம் ஆசீர்வாதத்துக்காக ஏங்கித் தவிக்கிறது ! தாங்கள் சந்திக்கப்போகும் கடுமையான சிக்கல் மிக சமீபித்திருக்கிறதை அவர்கள் உணர்கிறபடியால், தங்களை விடுவிக்க ஒரு பலமிக்க புயம் தேவை என்று மனுஷர் ஒவ்வொரு நாளும் அதிகதிகமாக உணர்கிறார்கள். ஆனால் மிகவும் அத்தியாவசியமானதும் விரும்பப்படுகிறதுமான நீதியின் ஆளுகையோடு, மனுஷரோடு பிறந்த பாவம் எந்தளவுக்கு ஒத்துப்போகாததாக இருக்கிறது என்று அவர்கள் காணாதிருக்கின்றனர். உதவியும் ஆசீர்வாதமும் தேவை என்று உணர்ந்துகொள்ளப்படும் முன்பே, கோபத்தின் நாள் வந்தாகவேண்டும். தேவனுடைய எரிச்சலின் அக்கினியானது, மனிதருடைய சிந்தையிலும், இருதயத்திலும், உலகத்திலும் ஊடுருவியுள்ள தீமையின் அரக்கர்களை கடுமையாக சுட்டெரிக்கவேண்டும். இது அழிக்கக்கூடியது மட்டுமல்ல, சுத்திகரிக்கக்கூடியதுமாகும். தேவனுக்கு நன்றி. இது நேரடி அர்த்தத்திலான அக்கினி அல்ல, உருவகமான அக்கினி. இதனைத் தொடர்ந்து, கர்த்தர் ஜனங்களுடைய பாஷையை சுத்தமான பாஷையாக (சுத்தமான செய்தி) மாறப்பண்ணி, தெய்வீக சித்தத்தையும், இரட்சிப்பின் திட்டத்தையும் தெளிவாக விளங்கப் பண்ணுவார்.

**லேவியின் புத்திரரை முதலாவது நியாயந்தீர்த்தல்**

கிறிஸ்தவ மண்டலத்தின் மீதான நியாயத்தீர்ப்பின் முற்பகுதி, குறிப்பாக, வெள்ளிக்கு ஒப்பான வகுப்பாராகிய நிஜமான லேவியின் புத்திரர் மீதே வருகிறது. பொன்னுக்கு ஒப்பான வகுப்பாராகிய, முற்றிலும் ஜெயங்கொண்ட உண்மையுள்ள வகுப்பார் போலவே, இவர்கள் தங்களை பிரதிஷ்டை செய்திருந்தனர். இந்த வெள்ளி வகுப்பார் திரள்கூட்டத்தாராக இருப்பர் என்று நாம் புரிந்துகொள்கிறோம். இவர்கள் மாபெரும் உபத்திரவத்தில் அகப்பட்டு, கரைபடிந்திருந்த அழுக்கான தங்கள் ஆடைகளை, ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்த்து, வெண்மையாக்கிக் கொண்டனர்(வெளி7:9–17). அவர்களுடைய உடன்படிக்கைக்கு இசைவாக நடந்து, பலிசெலுத்தத் தவறியதால், அவர்கள் அழிவுக்கென்றோ அல்லது காயப்படுத்தும் நோக்கத்திலோ இல்லாமல், அவர்களுடைய மாம்சத்தை அழிக்கும் நோக்கத்தில், உடன்படிக்கையின் தூதனால் இவர்கள் தனித்தனியே கையாளப்பட்டு, "கர்த்தராகிய இயேசுவின் நாளில் அவர்களுடைய ஆவி இரட்சிக்கப்படும்படிக்கு" நடத்தப்படுவார்கள்.

ஒவ்வொரு மனிதனுடைய கிரியை எத்தகையது என்று இந்த மகாநாளின் அக்கினி பரிசோதிக்கும். முழு அர்ப்பணம் செய்த கிறிஸ்துவின் சீஷர்களாக, கர்த்தரை அவர்களுடைய அஸ்திவாரமாகக்கொண்டும், பொன் வெள்ளி விலையேறப்பெற்ற கற்களாகிய தெய்வீக சத்தியத்தைக் கொண்டும், உண்மையும் பலமும் தகுதிவாய்ந்த குணாதிசயத்தால், நெறி தவறாமல், கர்த்தருக்கு உண்மையாயிருந்து கட்டினவர்கள் யார் என்று சோதிக்கும்.மேலும் மரம், புல், வைக்கோலைக் கொண்டு கட்டினவர்கள் யார் என்றும் சோதிக்கும். அவ்விதமே மணலை அஸ்திவாரமாகக் கொண்டு கட்டினவர்கள் யார் என்றும் இது கண்டறியும் – 1கொரிந்3:1–15.

**நியாயத்தீர்ப்பில் மாம்ச இஸ்ரயேலரின் பங்கு**

மல்கியா 3ம் அதிகார தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி, மாம்ச இஸ்ரயேலருக்கு பொருந்துவதாக காணப்படுகிறது. சீனாய் மலையில் அவர்களோடு அவர் செய்த உடன்படிக்கைக்கு ஒத்ததாக, தம் வழிமுறை இருந்துவந்ததைக் காண்பித்து, தம் ஜனமாக அவர்களைக் கடிந்துகொள்கிறார். ஆனால் உடன்படிக்கையின்படி அவர்கள் தங்கள் பங்கை நிறைவேற்றுவதில் உண்மையாய் இருக்கவில்லை. பழைய உடன்படிக்கையை முந்தும் புது உடன்படிக்கையின் மாபெரும் தூதராக அவர் வெளிப்பட்டு, தேவனுடைய முந்தைய ஜனங்களாக இருந்தோரை அவர் சுத்திகரிக்கிறார். அவர்களுக்கு தயவு காண்பித்து, மீட்டெடுக்கத் துவங்கும் காலம் தற்போது வந்திருக்கிறது. ஆனால் அவர்கள் முழுமையான சீர்பொருந்துதலை அடையுமுன்பாக, அவர்களது சுத்திகரிப்புக்காகவும், மாபெரும் மேசியாவுக்காக ஆயத்தமாகவும், கூடுதலான சிட்சையை அவர்கள் அடையவேண்டியுள்ளது.

கர்த்தருடைய முதலாம் வருகையில், தம்மை அவர்களிடத்தில் ஒப்புவித்தபோது, அவர்கள் அவரை மறுதலித்தாலும், யாக்கோபின் இக்கட்டுக்காலம் தற்போது சமீபமாயிருப்பதால், அதில், இஸ்ரயேலர் தங்கள் ராஜாவைக் காணவும், உணர்ந்துகொள்ளவும் வருவார்கள். "அப்பொழுது

அவர்கள் தாங்கள் என்னை நோக்கிப் பார்த்து(விசுவாசக் கண்களால்), ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, மனங்கசந்து துக்கிப்பார்கள்''(சகரி12:10). அப்பொழுது அவர், புது உடன்படிக்கைக்குரிய நிபந்தனையின்கீழ், தம் தயவுக்குள் அவர்களை மீண்டும் ஏற்றுக்கொள்வார். ''அப்பொழுது பூர்வ நாட்களிலும் முந்தின வருஷங்களிலும் இருந்ததுபோல, யூதாவின் காணிக்கையும், எருசலேமின் காணிக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்(மல்கி 3:4). அதன்பிறகு அவர்கள், முழு உலகையும் ஆசீர்வதிக்கும் மேசியாவின் ஒரு வாய்க்காலாக பயன்படுத்தப்படுவார்கள்.

**நிஜமான உபத்திரவத்திற்கு குருடராயிருத்தல்**

இந்த மகா உபத்திரவக் காலத்தில், ஒவ்வொரு தீய காரியத்துக்கும் எதிராக, தீவிரமான சாட்சியாக நம் கர்த்தர் இருந்து, அதை கடிந்துகொள்வார். இவ்வாறாக, எல்லா மனுஷரும் நீதியின் வழிகளில் அவரால் போதிக்கப்படுவார்கள். ஆனாலும் தரித்திரரும் உலகில் குருடரானோரும், சாத்தானின் விலங்குகளால் கட்டப்பட்டிருந்து, தங்களையே அறியாதிருப்பார்கள். தங்களுடைய ஒவ்வொரு அசைவுக்கும் குறிக்கோளுக்கும் சுயநலமே அடிப்படையாய் உள்ளதை அவர்கள் காண்பதில்லை. இவ்வாறு சுயநலத்தால் இயக்கப்படாதவர்கள், கட்டுப்படுத்தப்படாதவர்கள், முக்கியத்துவமற்ற சிறு எண்ணிக்கையாயிருப்பதால், செல்வாக்கின்றி கனமின்றி காணப்படுகின்றனர்.

சுயநலத்தால் ஈர்க்கப்பட்டபோதிலும், நீதிக்கடுத்த முயற்சிகளில் ஈடுபடுவோரை ஏளனப்படுத்துவது நம் நோக்கமல்ல. காரியங்களைக் குறித்தான உண்மை கிறிஸ்தவனின் பார்வையானது, அதிக வித்தியாசமானது என்று நாம் சுட்டிக்காட்டுகிறோம். இது வேதாகமத்தின் பார்வையாகும். இப் பார்வையானது தேவனையும், தெய்வீக சித்தத்தையும் நோக்கத்தையும் திட்டத்தையும் வெளிப்பாடுகளையும் கண்டுணர்வதோடு, இதன்மூலம் உலகத்தின் எல்லா நடவடிக்கைகளையும் கண்டுணர்கிறது. தற்கால அரசியல் கொந்தளிப்பையும், பொருளாதார மற்றும் சமுதாய ஊழல்களை வெளிக்கொணரும் மற்றுமொரு சக்தியாகும். இந்த சக்தியானது, தீர்க்கதரிசனத்தில் உள்ளபடி இந்த முழு உலகத்தையே உறையச்செய்யும் மாபெரும் பூமியதிர்ச்சியாகிய பேரழிவு எனப்படும் மகா உபத்திரவக் காலமாக இருக்கிறது. இந்த மகா உபத்திரவமானது வேத வசனங்கள் காண்பிக்கிறபடி 1915ல் நம்மேல் வருவதுடன், இதற்கு இடைப்பட்ட காலத்தில் இது நிதானமாக நெருங்கிவருகிறது.

இருண்ட யுகங்களின் ஒட்டுமொத்த மூட நம்பிக்கையும், அறியாமையும், குறிப்பிட்டளவு படிப்படியாக மறைந்து, தேவனுடைய ஏற்பாட்டால் ஜனங்களுடைய சிந்தைகள் விடுதலையாக்கப்படும். மத ரீதியிலான மூட நம்பிக்கைகள் மட்டுமல்ல, இராஜ்யங்களை சுதந்தரித்துக்கொள்ளவும், உலகில்ஆதிக்கம் செலுத்தவும், மற்றவர்களைக் காட்டிலும் சமுதாய சிலாக்கியங்களில் உயர்நிலைமைகளில் ஜீவிக்கவும், குறிப்பிட்ட குடும்பங்களுக்கு மட்டுமே தெய்வீக உரிமை அளிக்கப்பட்டுள்ளது என்ற மூடநம்பிக்கையிலிருந்தும் ஜனங்கள் விடுதலை பெறுவர். இந்தக் காரியங்கள் அனைத்தும் தற்போது உலகின் முன்பாக மறு பரிசீலனைக்கு வந்திருக்கிறது. பாதிரியார்களிடமிருந்தும், மூடப்பழக்கங்களிலிருந்தும், அரசியல் மற்றும் நிதிநிலைக்குரிய சர்வாதிகாரத்திலிருந்தும், பொது உடைமைக் கோட்பாடு(Socialism) உலகின் இரட்சகன் போல முன்னணிக்கு துரிதமாய் வந்துகொண்டிருக்கிறது. உலகமானது உற்றுப் பார்க்கும்படியாக அழைக்கப்படுகிறது, தம் விலையேறப்பெற்ற இரத்தத்தால் நம்மை மீட்டு, தம் நீதியின் இராஜ்யத்தை ஸ்தாபிக்க மீண்டும் வருவேன் என்று வாக்களித்தவரை நோக்கிப்பார்க்கும்படி அல்ல, தன்னைத் தானே நோக்கிப் பார்க்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறது. தன் சொந்த நடவடிக்கைகளையும், சுயநல விருப்பங்களையுமே தன் ஒரே நம்பிக்கையாகக் கொண்டிருந்து, இவ்வாறு தேவனையும் அவரது மேலதிகார ஏற்பாடுகளையும் மறுதலித்து, தற்கால நிலைமைகள் மாறி முழு உலகிற்கும் ஆசீரைக் கொண்டுவரும் மகிமை நிறைந்த ஆயிரவருட ராஜ்யத்தில், வருங்காலத்தில் வைக்கப்பட்டுள்ள பலன்களைக் குறித்த தெய்வீக ஏற்பாட்டை மறுதலிக்கிறதை பார்க்கும்படி உலகிற்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

**பெயர்சபை கூட்டமைப்பு தற்போது உருவாகி வருகிறது**(Church federation now forming)

சபைகள் தற்போது ஒரு மாபெரும் கூட்டமைப்பாக கூட்டி சேர்க்கப்படுதல், நம்முடைய நிலைப்பாட்டின்படி,

வேதாகமத்தின் முன் உரைத்தலானது நிறைவேறுவதை காண்பிக்கிறது. இப்படிப்பட்ட எந்த சபை கூட்டமைப்பிலும் எந்தப் பங்கும் வகிக்கக்கூடாது என, கர்த்தருடைய புத்திக்கூர்மையும் உண்மையுமுள்ள பிரதிஷ்டைசெய்த ஜனங்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். இவ்விஷயத்தைக் குறித்து கர்த்தருடைய வார்த்தை கூறுவதாவது;

''இந்த ஜனங்கள் கட்டுப்பாடு என்று சொல்லுகிறதையெல்லாம் நீங்கள் கட்டுப்பாடு என்று சொல்லாமலும், அவர்கள் பயப்படுகிற பயத்தின்படி நீங்கள்

பயப்படாமலும், கலங்காமலும், சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள். அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக'' – ஏசா**8:11–16.**

அவருக்கு வெறுப்புண்டாக்காதபடிக்கு பயந்திருப்போம். மனுஷருக்கோ பயப்படாதிருப்போமாக. மகா உபத்திரவக் காலத்தில் கோதுமை மணிகளோடு தங்களை ஐக்கியப்படுத்தியிருக்கிற களைகள் அனைத்தும் கட்டுகளாக கட்டப்பட்டு, மகா உபத்திரவக் காலத்தில் ஒன்றாக சேர்க்கப்படும். சமுதாயப்புரட்சி விரைவில் வலிமை மிக்கதாக ஏற்பட்டு, இந்த தற்கால சமுதாயம், மதம் மற்றும் நீதி அமைப்புக்களையும் ஏற்பாடுகளையும் அக்கினியால் பற்றி எறியச்செய்து, அராஜகத்தில் முடிவுறச்செய்யும். இது தேவனுடைய மேலதிகாரத்தின் மூலமாக, நீதிக்கு இணக்கமாயிராத எல்லாவற்றையும் அகற்றி, தேவனுடைய இராஜ்யத்துக்கு ஆயத்தப்படுத்தும். இந்த இராஜ்யம் முழு மனித குடும்பத்தின் மீட்புக்காகவும், ஆசீர்வாதத்துக்காகவும், வல்லமையும் மாபெரும் மகிமையோடுகூட வெளிப்படுத்தப்படும்.

யூத யுகம் முடிவடைய நெருங்கிவரும் சமயத்தை நாம் நினைவுகூறுகையில், மேசியாவின் முன்னோடியாக வந்த யோவான்ஸ்நானகன் யூதர்களிடத்தில் அறிவித்தார்; ''என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்தஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்'' – லூக்**3:16.** இதன் நிறைவேறுதலை நாம் நினைவில் கொள்ளவேண்டும். கபடற்ற உத்தம இஸ்ரயேலர் பெந்தெகொஸ்தே நாளில், பரிசுத்தஆவியினால் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்தவ சபையின் களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டனர். மீதமுள்ள யூத ஜனங்கள், தங்களை சந்திக்கும் காலத்தை அறியாதிருந்து, அவர்களுடைய தேசத்தை அகற்றின மகா உபத்திரவக் காலத்தில் பதர்களாக சுட்டெரிக்கப்பட்டனர். வேதாகமத்தில் இந்த மகா உபத்திரவத்தின் நிலைமைகள் ஒரு சிறு அளவிலான காட்சியாக காண்பிக்கப்பட்டு, இதுபோன்ற நிலைமை இந்த சுவிசேஷயுகத்தின் முடிவு நாட்களிலும் எங்கும் இருக்கும்.

யூதர்கள் மீது வந்த அந்த உபத்திரவ நேரத்தில், இஸ்ரயேல் தேசம் அழிவை சந்திப்பதைத் தடைசெய்ய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும், எல்லா முயற்சியும் தோல்வியுற்றன. தேசத்தைப் பாதுகாக்கவும், சட்டம் ஒழுங்கை ஏற்படுத்தவும் விரும்பி, ரோமப் பேரரசன் அவர்களை அழிக்க அல்ல, அவர்கள் மத்தியில் சமாதானத்தை நிலைநாட்ட ரோமானிய ராணுவத்தைஅனுப்பினான். ஆனால் கர்த்தர் தூண்டிவிட்ட அந்த உபத்திரவத்தின் அக்கினி, எந்த வல்லமையாலும் அணைக்கப்படாதபடிக்கும், அதன் கிரியையை முழுமையாக செய்துமுடிக்கவேண்டும் என்றும் அவர் முன்பே அறிவித்திருந்தார். அவ்வாறே நடந்தேறியது.

அதுபோலவே, இந்த தற்கல யுகம் உபத்திரவத்தின் மகா அக்கினியில் முடிவடையும்போது, அதில் ''களை வகுப்பாராகிய'' கிறிஸ்தவ மண்டலம் அகற்றப்படுவார்கள். இது ஜீவனுக்கான முழு அழிவாக இராமல்,(இந்த உபத்திரவத்தின் நாளின் கொடிய துன்பத்தில் அநேகர் தங்கள் ஜீவனை இழந்தபோதிலும்) மாறாக, இது எல்லா பூமிக்குரிய அரசாங்கங்களையும் அமைப்புக்களையும் முற்றிலுமாக சுட்டெரித்து, பெயர்சபைக்குரிய அனைத்தையும் அகற்றிப்போடும். இவைகள் அராஜகத்தின் அக்கினியால் சுட்டெரிக்கப்படும். அந்த அக்கினியை அணைக்கவோ, அல்லது தற்கால அமைப்புக்களின் முழு அழிவிலிருந்து தடுக்கவோ எதுவும் அனுமதிக்கப்–படுவதில்லை. ஆனால், தேவனுக்கு ஸ்தோத்திரம், தற்கால முறைமையின் வஞ்சனைகளையும், பொய்மைகளையும், சுள்ளிக்கட்டைகளையும் அக்கினி பட்சிக்கும்போது, அது அவரது வரவிருக்கும் ராஜ்யத்தில் தேவன் வடிவமைத்திருக்கிறதும், ஏற்பாடு செய்திருக்கிறதுமான மாபெரும் ஆசீர்வாதத்துக்கு வழியை ஆயத்தம் பண்ணும்.

''உம்முடைய நியாயத்தீர்ப்புக்கள் பூமியிலே நடக்கும்போது, பூச்சக்கரத்துக் குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்''(ஏசா**26:9).** இது ஒரு பயங்கரமான சிட்சையாயிருந்தபோதிலும், காயப்பட்டவனை குணமாக்குவதற்கே, திறமையான அறுவை சிகிச்சை நிபுணரின் இந்தப் பணி அவசியமாயுள்ளது.

**பொய்கள் என்னும் அடைக்கலம் அடித்துச்செல்லப்படும்**

கன்மலையின்மீது கட்டப்பட்ட வீடு அல்லது மணல்மீது கட்டப்பட்ட வீடு குறித்த உவமையில் நம் கர்த்தர், இந்த யுக முடிவின்போது, குறிப்பாக, கிறிஸ்தவ மண்டலத்தின் மீது வரும் பரீட்சைகளைக் குறித்து ஒரு ஆற்றல் வாய்ந்த காட்சியைக் கொடுக்கிறார். இங்கு அவர் காண்பிக்கிற தோற்றம், கடும்புயல், வெள்ளம், பலம் வாய்ந்த காற்று, தன் பின்னடியார்களென்று வெளிப்படையாக ஒப்புக்கொள்வோரின் விசுவாச அமைப்பின்மேல் மோதி, கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது கட்டப்படாதவர்–களுடைய விசுவாசத்தை கவிழ்த்துப் போடுகிறது.அவ்வாறே நாம் அதை இன்று பார்க்கிறோம். கிறிஸ்தவ மண்டலம் முழுவதும் தற்போது சத்தியத்தின் பலமிக்க பெருமழையானது பொழியப்பட்டு வளர்ச்சியடைந்து வருகிறது. பெரும் புயல் தற்போது பொங்கி எழுகின்றது. இந்த அதிர்ச்சியின் கீழ், கிறிஸ்தவ அமைப்புக்கள் நடுங்குகின்றன. அவர்களுடைய அஸ்திவாரமாகிய மனித பாரம்பரியம், மனிதனால் உண்டாக்கப்பட்ட கோட்பாடுகள், அறியாமை, ''பிசாசுகளின் உபதேசங்கள்'' **(1தீமோ4:1)** போன்றவைகள்,திருப்தியற்றவைகளாக உணரப்படுகின்றன. அவர்கள்மீது தற்போது திரும்பியிருக்கிற மாபெரும் சத்திய வெளிச்சத்தின் தேடுதல் முன்பு, அவர்களால் நிற்கக்கூடாதிருக்கிறது. பெயர் கிறிஸ்தவ சபை கட்டியிருக்கிற,

புதைமணல் அஸ்திவாரத்தினை சத்திய வெள்ளம் அடித்துச் செல்கிறது, அவளுடைய முழுமையான மூழ்குதலானது பின்தொடர்கிறது. தற்போது நம்மீது இருக்கிற இந்த மகாநாளின் பரீட்சையில், தேவனுடைய உண்மை பிள்ளைகளாகிய நாம் மட்டுமே நிலைத்துநிற்க திராணி பெற்றிருப்போம்.

ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் இதே புயலையும் வெள்ளத்தையும் குறித்து குறிப்பிடுகிறார்;

“பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும், மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டு போகும். வாதை புரண்டு வரும்போது அதின் கீழ் மிதிக்கப்படுவீர்கள்(கள்ள போதகர்கள்). அது புரண்டு வந்த மாத்திரத்தில் உங்களை அடித்துக் கொண்டுபோகும். அது நாள்தோறும் இரவும் பகலும் புரண்டுவரும். அதைப்பற்றி பிறக்குஞ் செய்தியைக் கேட்பதும், சஞ்சலத்தை உண்டாக்கும்” – ஏசா 28:17–19.

முழு உலகையும் இந்த மிகப்பெரிய உபத்திரவம் சூழ்ந்துகொள்ளும். மெய்யாகவே இது ஓரளவுக்கு எல்லா தேசங்களிலும் ஏற்கனவே துவங்கிவிட்டது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்களால் எல்லா மனுஷர்களும் விழித்தெழுப்பப்படுவார்கள். அவர்களை மீட்கவும், உயர்த்தவும், இரட்சிக்கவும் யேகோவாவின் கரம் தங்களுக்கு அவசியம் தேவை என்ற உணர்வுக்கு கொண்டுவரப்படுவார்கள். மேசியாவால் முழு உலகமும் நியாயந்தீர்க்கப்படப் போகிறது. இந்த மகா நியாயாதிபதி தம் சிம்மாசனத்திலும், அதிகாரத்திலும் அமரும்வரை, நியாயத்தீர்ப்பும் பரீட்சையும் துவங்காது என்று எல்லோரும் சாட்சியமளிப்பர். இதன் காரணமாக, நம் கர்த்தருடைய முதல் வருகைக்கு முன்பு மரித்திருந்தவர்களில் ஒருவரும் அவரால் நியாயந்தீர்க்கப்பட்டிருக்க முடியாது. அவ்வாறே நம் மீட்பர் நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டதிலிருந்து, பொதுவான உலகம் பரீட்சிக்கப்படுதல் நடைபெறவில்லை என்ற உண்மையை அறிந்து, எல்லோரும் விழித்திருந்து, அதேசமயம், தற்காலத்திற்கு முன்பும், உலகம் சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்பதையும் அறிந்திருக்க வேண்டும். மெய்யாகவே, மனுக்குலத்தின் பெருந்திரளானோர் நியாயாதிபதியை அறிந்திருக்கவுமில்லை, அவரது பிரமாணத்தை புரிந்திருக்கவும் இல்லை, மேலும் நித்திய ஜீவன்பெறத் தேவையான நிபந்தனைகளையும், தேவைகளையும் பற்றிய கருத்தையும் அறியவில்லை. இப்பாடத்தைப் பற்றி வேத வசனங்கள் கூறுவதற்கு இது பொருத்தமாயுள்ளது.

**நியாயத்தீர்ப்பு நாள் ஒரு ஆசீர்வாதத்தின் காலம்**

“தேவன் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே தாம் நியமித்த ஒரு மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார், அந்த மனுஷனை(தலையும் சரீரமுமாகிய கிறிஸ்து) மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார்” என்று அப்17:31இல் அப்.பவுல் அறிவிக்கிறார். அப்போஸ்தலரின் காலத்தோடு ஒப்பிடும்போது, அந்த நியமிக்கப்பட்ட நாள், வருங்காலத்துக்குரியதாயிருந்தது, தற்போது அந்த நாள் உதயமாகும் நேரத்தில் இருந்தாலும், இன்னும் அது பிந்தின நாளுக்குரியதாயுள்ளது. தம் சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தால் உலகை விலைக்கு வாங்கி, மரித்தோர் மற்றும் உயிரோடிருக்கிற எல்லா மனுஷருக்கும் நியாயாதிபதியாகியிருப்பதால், கிறிஸ்துவின் நற்காரியங்கள் அடங்கிய சுவிசேஷம் விளைவை ஏற்படுத்தும். “பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்பார்கள், கேட்டு வெளியே வருவார்கள், அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்” – யோவா 5:28,29,25.

ஆதாமுக்கும் அவரது சந்ததியார் அனைவருக்கும் ஒரு புதிய பரீட்சை அருளப்பட உள்ளது. மேசியாவின் மாபெரும் இராஜ்யத்தின் சத்திய அறிவொளி மற்றும் மேம்பாடு அடையச்செய்யும் சக்தியின் கீழான, ஒரு தனிப்பட்ட நபர்களுக்கான பரீட்சையாக இருக்கும். உண்மையாகவே, பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிப்பாகிய உலகிற்கு இது மாபெரும் மகிழ்ச்சிக்குரிய நற்காரியங்களாயுள்ளது. மாபெரும் விரோதி முரண்பாடாக சிந்திக்கச்செய்து, பெரும்பான்மையான ஜனங்களையும், கிறிஸ்தவர்களையும்கூட வஞ்சிப்பதில் வெற்றிபெற்றிருந்தாலும், இந்த சோதனையின் நாளில் நியாயத்தீர்ப்பின் நாளில், ஆதாமின் குமாரர்களும் குமாரத்திகளுமாகிய அனைவரும், அவர்கள் சித்தங்கொண்டிருப்பார்களானால், தங்கள் மீட்புக்காகவும் ஆசீர்வாதத்துக்காகவும் வருவார்கள். இந்த மகாநாள் எல்லா தேசங்களுடைய விருப்பமாக இருக்கப்போகிறது என, தீர்க்கதரிசியாகிய தாவீதால் வலிமையோடு சித்தரிக்கப்பட்டுள்ளது(சங்96–98). கர்த்தருடைய பரிசுத்தவான்கள், கிறிஸ்துவின் உண்மையுள்ள பின்னடியார்கள், “ஆட்டுக்குட்டியானவர் எங்கே சென்றாலும் அவரைப் பின்பற்றுபவர்களாயிருந்து”, தங்கள் தலையோடு உடன் நியாயாதிபதிகளாக ஐக்கியப்பட்டிருந்து, ஆதாமுக்குள் இழந்துபோன எல்லாவற்றையும் அவரது மகிமைநிறைந்த பணியாகிய, மனிதனை உயர்த்துதலிலும், திரும்பக்கொடுத்தலின் பணியிலும் பங்குபெறுவார்கள்.

நம் தேவனின் அற்புதமான ஏற்பாடுகள் அனைத்தையும் காண, நம் கண்கள் அபிஷேகம் பண்ணப்பட்டிருப்பதற்காக, நாம் எந்தளவு மகிழ்ச்சியாயிருக்கவேண்டும்! தற்போது உலகெங்கும் வட்டமிடுகிற இருண்ட மேகங்களின் முக்கியத்துவத்தையும், விரைவில் அது முறிவுபெறப்போவதையும் நம்மால் புரிந்துகொள்ள முடிந்ததற்காக, எந்தளவு நாம் மகிழ்ச்சியடையவேண்டும்! இந்த உபத்திரவ மேகங்களில் மறைந்துள்ள அனுகூலத்தை நம்மால் பகுத்துணர முடிந்ததற்காகவும், இதன் முடிவு மகிமையுள்ளதாயிருக்கும் என்று அறிவதிலும் எந்தளவு நாம் சந்தோஷமாயிருக்கவேண்டும்! வரவிருக்கின்ற சுழற்காற்று மற்றும் புயலின் கண்ணீர்கள் மற்றும் இரத்தகளரிக்கு அப்பால், ஆசீர்வதிக்கப்பட்ட நீதியின் சூரியன் எழும்பி, தன் இறக்கைகளின் கீழ் குணப்படுத்தலையும் ஆசீர்வாதத்தையும் கொண்டுவரும். தேவனுடைய நேசகுமாரனின் இராஜ்யம், நொறுங்கிய, ஆதரவற்ற, மனமுறிவுள்ள மனுக்குலத்தை வெளிச்சத்திலும், மகிமையிலும் நடத்திச் செல்லும்!

---------